Registered as a News paper in Ceylon

விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 3 | ஐப்பசி 21 | றம்ழான் 18 | ஞாயிற்றுக்கிழமை | (7—11—71) | இதழ் 268

சன்மானம் ரூபா 500/-

எமது நீர்வேலி பீடிக் கிளையில் 3-11-71 இரவு சுமார் ரூபா 2000/- பெறுமதியான பீடிகள் களவாடப்பட்டுள்ளன. இதுபற்றி எமக்கு தக்க ஆதாரத்துடன் தகவல்கொடுப்பவருக்கு ரூபா 500/- சன்மானம் வழங்கப்படும்.

தகவல் தருபவர்களின் விபரம் யாவும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும்.

தகவல் தரவேண்டிய விலாசம்

அதிபர்

ஆர். வி. ஜி. பீடிக் கம்பனி,

47, பீச்ரோட்,

யாழ்ப்பாணம்.

# பிரதமர் எடுக்க இருக்கும் புதிய நடவடிக்கைகள்

## அரசாங்கக் குழுக் கூட்டத்தில் அறிவிப்பு

கோட்டை, சனி

பலதுறைகளில் இன்று நிலவும் ஊழல்கள் அரசாங்கத்துக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த ஊழல்களுக்குக் காரணமாக இருப்பவர்கள் எந்தப்பெரிய பதவியை வகித்தாலும் அவர்கள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்கப்போவதில்லை என்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எச்சரிக்கை விடுத்தார்.

ஊழல்களைப் பூண்டோடு ஒழித்துக்கட்டி மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்து மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதே அரசின் நோக்கமென்று இன்று கொழும்பில் நடந்த அரசாங்கக்குழுக்கூட்டத்தில் அறிவித்தார்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ தலைமையில் அரசாங்க ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

அரசாங்கத்தின் ஐந்தாண்டு வேலைத்திட்டம் பற்றி இம்மாதம் 9-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆட்சிமன்றத்தில் தெரிவிக்கப்படுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

தனிநபர் ஒருவர் சொந்தமாக வைத்திருக்கக்கூடிய காணியின் உச்சவரம்புபற்றி தகுந்த நேரத்தில் அரசாங்கம் தெரிவிக்கும் என்றும் திருமதி ஸ்ரீமாவோ கூறினார்.

நன்மைபயக்கக் கூடியவற்றைத் தேசியமயமாக்கத் தாம் தயங்கப்போவதில்லையென்றும் சுதந்திரக்கட்சிக் காலத்தில்தான் முக்கியமானவை தேசியமயமாக்கப்பட்டனவென்றும் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நன்மைபயக்கக்கூடியவை தேசியமயமாக்கப்படுமென்றும் அவர் உறுதி கூறினார். இலங்கைபரலைரநல (?) இச்சுவி சொந்தமான உடைமைகளும் ... விரைவில் சட்டம் கொண்டுவரப்படுமென்றும் அவர் அறிவித்தார்.

சம்பளம் வழங்குவது சம்பந்தமாக உச்சவரம்பு ஒன்றையும் அரசாங்கம் விரைவில் வகுக்கவிருக்கிறது என்பதையும் அவர் வெளியிட்டார்.

நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கே கூடுதலான பணம் ஒதுக்கப்படுகிறதென்றும் ஆனால் சிலரின் தப்பான நோக்கங்கள் அபிவிருத்தித் திட்டங்களைப் பாதிக்கச்செய்வதாக உள்ளாரென்றும் சொன்னார்.

"மக்களின் கஷ்டங்களை நான் நன்கு உணர்ந்திருப்பதுடன் அவைகளை மதித்து அவைகளைப் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் பிரதமர் அறிவித்தார்.

நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா இக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் சமீபத்தில் நடந்த பயங்கரவாதிகள் எழுப்பத்தினால் 40 கோடிருபாய் நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் இந்த நஷ்டம் ஏற்படாத பட்சத்தில் தேசியதலத் திட்டத்துக்கு இந்தநிதி உதவப்படிருக்குமென்றும் சொன்னார்.

கல்விமந்திரி டாக்டர் அல் ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் பேசுகையில் கல்வித்துறையில் ஏதாவது குறைபாடு இருப்பின் அவைகளைத் தீர்த்துவைக்கத் தாம் தயாராக இருப்பதாக அமைச்சர்களிடம் கூறினார்.

மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து பல அங்கத்தவர்களும் இக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

## அரசாங்க சேவையில் 700 புதிய லிகிதர்கள்

### டிசம்பர் 2-ல் நியமனம்

கொழும்பு சனி

அரசாங்க பொதுச் சேவையில் புதிதாக 700 பேர் நியமனம் பெறவிருக்கிறார்கள். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அடுத்த வாரத்தில் அனுப்பிவைக்கப்படும்.

புதிதாக நியமனம் பெறுபவர்கள் டிசம்பர் 2-ம் திகதி வேலையை ஆரம்பிப்பார்கள்.

லிகிதர் சேவை நியமனத்துக்காக 1314 பேர் கொழும்பிலும் மற்றும் மாவட்டங்களிலும் அக்டோபர் 28-ம் திகதியிலிருந்து அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டனர். (ச)

## பாகிஸ்தானுக்கு ஆயுதம்: அமெரிக்கா நிறுத்துமாம்

வாஷிங்டன், நவ. 6

பாகிஸ்தானுக்கு ஆயுத சப்ளையை இன்னும் சில தினங்களில் அமெரிக்கா நிறுத்திவிடும் என வாஷிங்டனில் இருந்து வெளியான செய்தியொன்று கூறுகிறது.

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அதிபர் நிக்ஸனுடன் வெள்ளைமாளிகையில் நடாத்திய பேச்சுவார்த்தையின் பிரதிபலிப்பே இந்த ஆயுத சப்ளை நிறுத்தமாகும் எனக் கூறப்படுகிறது.

இவ்வாரம் காங்கிரஸ் கூடுகையில் அதில் ஆராய்ந்த பின்னர் ஆயுத சப்ளையை நிறுத்துவது குறித்து அமெரிக்கா அதிகாரபூர்வமான அறிவித்தலை விடும் என மேற்படி செய்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண் வைத்திய நிபுணர் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி பகுதிநேர கண் வைத்திய நிபுணர் டாக்டர் ஆர். பரராஜசேகரம் ஐக்கிய அமெரிக்காவில் நடந்த கண் பற்றிய ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்டபின் நாடு திரும்பியுள்ளார்.

## கவிப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை கவிப் சீட்டிழுப்பின் முதல் மூன்றுமுடிவுகளும்வருமாறு:

முதலாம் பரிசு
23 K 0834 ரூ. 93,670

இரண்டாம் பரிசு
08 K 0595 ரூ 37 068

மூன்றாம் பரிசு
31 X 0488 ரூ 9,167

## திருமண அழைப்பு

கணேஷ்—ஜெயம்

கோண்டாவில் கிழக்கைச்சேர்ந்த திரு. சி.பொன்னம்பலம், காலஞ்சென்ற திருமதி பொன்னம்பலம் ஆகியோரின் புதல்வன்

செல்வன். கணேஷலிங்கம்

(Engineer, Royal Borough of Kingston upon Thames, Surrey. England ) அவர்களுக்கும்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு.சி. சேனாதிராசா (நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமைச்சு) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி

செல்வி ஜெயதேவி

(ஆசிரியை, புனித மரியாள் கல்லூரி, திருமலை)

அவர்களுக்கும் எதிர்வரும் ஐப்பசி மாதம் 28-ம் திகதி (14-11-71) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-45க்கும் 2-45க்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில், கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலில் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

3117

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

# மூன்றாவது உலக யுத்த ஆபத்து?

கே. பி. ஹரன்

எந்தச் சமயத்திலும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூண்டுவிடக்கூடிய ஆபத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எல்லைப் புறங்களிலே தாக்குதல்கள் நடப்பதாகவும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டு வருவதாகவும் இருதரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

ஆபத்தான இந்தச் சமயத்திலே இந்தியப் பிரதமர் இந்திரா, பிரிட்டன், அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுக்குப் பறந்து சென்றதன் ஒரே நோக்கம், யுத்தம் ஏற்படாமல் தடுக்கவும் அமைதியான முறையில் சுமார் ஒரு கோடி அகதிகளின் பிரச்னை தீரவேண்டுமென்பதற்காகவும்தான்.

இந்தியாவுக்குச் சுதந்திரமளிக்கவேண்டுமாயின், அதைச் சமய அடிப்படையில் இரண்டாகப்பிரிக்கவேண்டுமென்ற நிபந்தனையை விதித்தது பிரிட்டன்தான். அப்படிப் பிரித்தால்தான் சுதந்திரமளிக்கச் சம்மதிக்க முடியுமென்றும் சர்ச்சிலும்சொன்னார். மகாத்மாகாந்திக்கு இது பிடிக்கவேயில்லை. ஆனால் இதற்கிடையே நாடெங்கும் வகுப்புக்கலவரங்கள்மூலைக்கு மூலை கிளம்பின. ராஜாஜி, நேரு முதலியவர்கள் சுதந்திரம் பெறுவதற்காக நாட்டைப் பிரிக்கவும் ஒப்புக்கொண்டனர்.

அன்றே லட்சக்கணக்கான அகதிகள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் சென்றனர். அது ஒரு பெரிய சோகக்கதை. அந்தக்கதை இன்னும் முடியவில்லை நீடிக்கின்றது. கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு இச்சமயம் ஓடிவந்துள்ள சுமார் ஒருகோடிப் பேரில் 100க்கு 80 விகிதம் இந்துக்களாம். அன்று வராமல் இருந்தவர்கள் இருபது வருடம் கழித்து வந்திருக்கிறார்கள். தங்கள் வீடுவாசல்களை விட்டுவிட்டு, உயிர் தப்பினால் போதும் என்று பரதேசிகளாக வந்துள்ள அவர்களின் எதிர்காலம் என்ன? அவர்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு இன்றைய நிலையில் திரும்பிச் செல்வார்களா? சென்றால் அவர்களின் கதி என்னாகும்?

இவ்வளவு அகதிகளும்தங்கள் வீடுவாசல்களுக்குத் திரும்பிச்செல்லக்கூடிய அரசியல் நிலைமையை ஏற்படுத்தவேண்டுமென்று, பிரிவினைக்குக் காரணமாகவிருந்த பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளைக் கேட்கின்றார் பிரதமர் இந்திரா காந்தி. அவை விரும்பினாலும் அமைதியான அந்த அரசியல் மாற்றத்தை இப்போது செய்ய முடியுமா? மிகவும் சந்தேகம். பிரிட்டிஷார் தாங்கள் ஆளும்போது பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டனர். ஆட்சி அதிகாரத்தை விட்டுப் போகும் போதும், சமய அடிப்படையில் நாட்டைப்பிளவுபடுத்திவிட்டுச் சென்றனர். இருபகுதி இராணுவமும் எதிரெதிராக நின்று சண்டைசெய்யுமென்று மகாத்மா அன்றே அஞ்சினார். அவர் அஞ்சியபடியே இன்று நடக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் இன்று இந்துக்குடும்பங்கள் ஒன்றாவது இருக்கிறதா என்பது தெரியவில்லை. அப்படி ஏதும் இருப்பின் அது ஆச்சரியமே. தினசரி சராசரி 30 ஆயிரம்பேர் கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வருவதாகத் தெரிகிறது. இந்நிலையில் இந்தியாவுக்கு ஓடிவந்த அகதிகளெல்லோரும் எப்படித் திரும்பிச் செல்லத் துணிவர்? பிரிட்டனில் பத்திரிகைக்காரர் ஒருவர் இந்தியப்பிரதமரை [illegible] கேட்டார். 'அகதிகள் திரும்பிச்செல்ல முடியாமல் நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்' என்று கேட்டபோது, அவர் சிரித்துவிட்டு, "இந்த வருடத்தின் "பெரிய ஜோக்" இதுதான். "தினசரி 30 ஆயிரம் பேர் அங்கிருந்து ஓடி வருகிறார்கள். இப்படியிருக்கஇங்கிருந்து ஏன் அவர்கள் திரும்பிச் செல்லக்கூடாது என்று கேட்பது எவ்வளவு வேடிக்கை" என்றார்.

அகதிகள் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச்செல்லவேண்டுமானால் முதலில் அங்கிருந்து யாரும் ஓடிவருவது நிற்கவேண்டும் அது நிற்காதவரை, அகதிகளில் ஒருவர் திரும்பிச்செல்லத்துணிவரா?

இதற்கிடையே கிழக்குப் பாகிஸ்தானில் கெரில்லா நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. இந்திய மண்ணிலேதான் கெரில்லாக்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்பதையும் அதை இந்தியா தடுக்காதென்றும் பிரதமர் இந்திரா ஹாலந்தில் ஒரு டெலிவிஷன் பேட்டியில் தெரிவித்தார். விடுதலைப் படையினரே இப்பயிற்சி அளிப்பதாகவும் இதைத் தடுக்கும் உத்தேசம் இந்திய அரசாங்கத்துக்கு இல்லை என்றும் எல்லைப்புறம் மிகமிக நீளமானதென்றும் யாரும் வருவதும் போவதும் தடுக்க முடியாதென்றும் அவர் சொன்னார்.

இவையெல்லாம் பார்க்கையில் அகதிகள் பிரச்னை சுமுகமாகத் தீருமென்றோ, இந்திய-பாகிஸ்தான் யுத்த நெருக்கடி குறையுமென்றோ தெரியவில்லை, யுத்தம் மூளுமானால், இருபகுதி மக்களுக்கும் ஏற்படக்கூடிய சங்கடங்கள் பன்மடங்கு அதிகரிக்கும். இருநாட்டுப் பொருளாதார நிலை மிக மோசமாகவுள்ளது. சண்டையும் மூளுமானால் கேட்க வேண்டியதில்லை.

யுத்தம் வந்தால் சீனா தமக்கு ஆயுத உதவிகளைச் செய்யுமென்று பாகிஸ்தான் அதிபர் தெரிவிக்கிறார். இந்தியாவுக்கோ ரஷ்ய ஆயுதங்கள் கிடைத்துவருகின்றன. ரஷ்யாவும் சீனாவும் மறைமுகமாக நின்று, இந்திய - பாகிஸ்தான் சண்டையை நடத்தப்போகின்றனவா?

ஆசியாக்காரரும் ஆசியாக்காரரும் அடித்துக் கொள்ளட்டும் என்ற நியதிக்கொள்கையை அனுஷ்டித்த அமெரிக்கா, இப்போது நிலைபாடம் கற்று அக்கொள்கையை மாற்றிக் கொள்வதாகத் தெரிகிறது. இந்நிலையில், அதே கொள்கையை ரஷ்யாவும், சீனாவும் கைக்கொள்ளுமா? அல்லது இந்தத் தகராறை அமைதியாகத் தீர்க்க முற்படுமா?

இந்தியா முதலில் யுத்தத்தை ஆரம்பிக்காதென்று பிரதமர் இந்திரா காந்தி அறிவித்துள்ளார். யுத்தத்தால் எந்தப் பிரச்னையும் தீராது என்று ஜனாதிபதி யாஹ்யாவும் கூறியுள்ளார்.

என்றாலும் இரு தரப்பினரும் யுத்தத்துக்கு முஸ்தீபுகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றனர். பாகிஸ்தானிலிருந்து ஓர் இராணுவக் குழு புஷ்டோவின் தலைமையில் பீகிங்குக்குச் சென்றுள்ளது. ரஷ்யத் தலைவர்களுடன் இந்தியாவும் ரகசிய ஆலோசனைகள் செய்துள்ளன.

இதே சமயம் பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத்தலைவர்கள், எழுத்தாளர், மாணவர் தலைவர்கள், முஜிபுர் ரஹ்மானை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி யாஹ்யாகானைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாடு விரும்பினால் முஜிபுரைத் தான் விடுதலைசெய்வதாக அதிபர் யாஹ்யா கூறியதை முன்னிட்டே இப்படி பாகிஸ்தான் தலைவர்கள் பலரும் கேட்டனராம். ஆனால் முஜிபுருடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தமுடியாதென்று அதிபர் அறிவித்ததாக ஒரு செய்தி அறிவிக்கிறது.

இதுவே அவரது முடிவான தீர்மானமாயின் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூண்டுவிடுமென்று அஞ்சவேண்டியுள்ளது. சென்றமுறையைப் போல் காஷ்மீரில் பாகிஸ்தான் ஊடுருவல் நடப்பதாகவும் விமானங்கள் எல்லையைத் தாண்டி வருவதாகவும் சொல்லப்படுகின்றது.

95 லட்சம் அகதிகள் பிரச்னை, ஒரிஸா புயல், பொருளாதாரச் சிக்கல்கள் இவற்றால் இந்தியா அவதிப்படும் சமயத்தில், இதுதான் தருணமென்று பாகிஸ்தான் தாக்கப்போகிறதா? இதற்கான பதில் வெகு சீக்கிரத்தில் தெரிந்துவிடும்.

## கல்விமான் என்றால் யார்

கல்விமான் எப்படியிருப்பான் என்ற இலக்கணத்தைக் கூறும்படி பல பேரறிஞர்களை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கேட்டிருந்தது. பலர் பல விதமாகப் பதில் சொன்னார்கள்.

ஆனால் பெர்னாட்ஷாவோ ஒரே வாக்கியத்தில்சொன்ன பதில் இது "மன்னிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசாமியை நான் இன்னும் சந்திக்கவில்லை."

## அந்தியேஸ்டி அழைப்பு

யாழ்ப்பாணம் ஆடீமன் வீதி 31-ம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த திரு. கா. ஆ. விஜயேந்திரா (இலங்கையின் சாரசபை பிரதம லிகிதர்) அவர்களின் மனைவியும், மலேசியா புகையிரதப்பகுதிக்கு உயர்பதவி வகித்த [illegible] திரு. ந. சுப்பிரமணியம் அவர்களின் புத்திரியும் செல்விகள் விஜயமாலா, விஜயமலர், விஜயமாலினி (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி), செல்வன் விஜயமனோகர் (யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் தாயாருமான

திருமதி நகுலேஸ்வரி விஜயேந்திரா அவர்களின் அந்தியேஷ்டி 8-11-71 திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் 11 மணிவரை கீரிமலையில் நடைபெறும். தொடர்ந்து இல்லத்தில் பகல் 12 மணி தொடக்கம் சபிண்டீகரணம் நடைபெறும். இக்கிரியைகளில் யோது உறவினர்கள், குடும்ப நண்பர்கள் அனைவரையும் கலந்து ஆன்மசாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம். சென்ற 9-10 71ல் நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றோம். 3118

அன்புவெளியீடு 5-ம்வகுப்புப்பரீட்சை21-11-71 உடன் பயிற்சிபெறவும், முதலாம் பிரிவில் சித்தி பெறவும், வாங்குங்கள்! ஒவ்வொரு வினாப்பத்திரமும் 60சதம் மட்டுமே! கணிதம், சூழல், ஆங்கிலம், தமிழ், இந்து சமயம், இஸ்லாம் ஆகிய பாடங்களுக்குண்டு! "அன்பு வெளியீடு" எனக் கேளுங்கள்.
அன்பு புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!
க. பொ. த. (உயர்தர) மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உயர்தர மாணவர் பௌதிகம்
பகுதி: 'காந்தவியலும் மின்னியலும்'
விலை: ரூபா 8-90
கிடைக்குமிடம்
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
3109

அறிவித்தல்
இல. 49, பிரதான வீதியில் இயங்கிவந்த எமது
'பொகுமாஸ்' சேட் மாளிகை ஸ்தாபனம்
'ரோலரும்ஸ்' ஸ்தாபனத்துடன் ஒன்றாக இயங்க உள்ளதை அறியத்தருகின்றோம்.
'ரொலரும்ஸ்'
46, மெயின்வீதி, (போன்:7099) யாழ்ப்பாணம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு (7- 1-71)
394 மீ & 59 மீ.

செய்திகள்:
காலை 6-30 பி.ப.12-45 மாலை 6-00 இரவு 9-00

காலை: 6-15 நாதாஞ்சலி- 6-20 சைவ நற்சிந்தனை, 6-25 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 பௌத்த நற்சிந்தனை, 7-05 துதிப்பாடல்கள், 7-45 மெல்லிசைப் பாடல்கள், 8-00 தமிழோடிசைபாடல், 8-15 சைவசமயப் பேச்சு, 8-25 சைவசமயச் செய்திக் கடிதம், 8-30சைவநீதி, 9-00 பெண்ணுலகம், 9-30 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 தொழிலாளர் வேளை, 10-30 எமது அகதி 11-00 கிளாரினட், 11-15 சிறுவர் மலர், 12-00 ஒலிபரப்புமுடிவு

மாலை: 6-15 நாட்டுப் பாடல்கள், 6-30 வயலின், 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 உலகச்செய்தி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 வானவிருந்து, 9-45 வாசகம் 10-30 செய்தித்தொகுப்பு.

14—11—71
வாரமலரில்
சுவைமிகு புதிய அம்சங்கள்

★ போராடப் பிறந்தவர்கள்
['ஈழநாடு' நடத்திய நாவல் போட்டியில் 2-வது பரிசு பெற்ற நாவல்...]
—'செங்கை ஆழியான்'

★ 'ஜீவபூமி'
[காலச்சக்கரம் "பசுந்துளிர்" "வெள்ளி மலை" ஆகிய கதை அம்சங்களைத் தந்து வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான
அ. செ. மு.
ஜீவகளையுடன் எழுதுகிறார்.]

★ நம்பலாம்; நடந்தது!
[அரசியல் தலைவர்கள், மந்திரிகள், ஆலயமன்ற உறுப்பினர்கள், சினிமா நட்சத்திரங்கள்-வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவங்களை நகைச் சுவையுடன் தருகிறார்]
—'யோகி'

சிறுகதை

# ஏழு வருடம்

இ. விநாயகலிங்கம்

இயற்கை தனது தலைநிலையிலிருந்து திடீரென விழித்துக்கொண்டதுபோல வீசிய இளந் தென்றற்காற்று, இலை பரப்பி வளர்ந்து பொலிந்து நின்ற அம்மல்லிகைப் பந்தலினூடாக அசைந்தாடிச் சென்றது. தென்றலின் குறும்பினால் இரு மல்லிகை மலர்கள் காம்பிழந்து உதிர்ந்தன.

மனவெளியில் தம் சிந்தனையை அலைவிட்டுக்கொண்டிருந்த நமசிவாயம், சட்டென சிந்தனை கலைந்தவராய் தம் கையில் விரித்து வைக்கப்பட்டிருந்த புத்தகத்தையும், அதன்பக்கங்களிடையே உறவாடிய அம்மலர்களிரண்டையும், தலைக்குமேல் வானத்திற்கு வேலியாக நின்ற மல்லிகைப்பந்தலையும் மாறிமாறி நோக்கினார். ஓரறிவு படைத்த கொடிகூட அதன் பக்குவத்தை அறிந்தோ என்னவோ தூய வெண் மலர் தூவி அர்ச்சிக்கிறது. ஐந்துடன் ஆறும் அறிவையும் பெற்ற அவர். அப்பந்தலின் கீழ் கட்டிலைப் போட்டு சாந்திமகானின் புனித கதையை கையில் ஏந்தி இதுவரை எண்ணிக்கொண்டிருந்த எண்ணங்களோ... ஒருகணம் அவரையே வெட்கம் பிடுங்கித் தின்றது. அகிம்சையையும், சத்தியத்தையும், பொறுமையையும் கொண்டு கட்டி எழுப்பப்பட்ட பொற்கோட்டையுள் நுழைந்துவிட்டு, வந்த இடத்தையே மறந்து விரோதத்தையும்வளர்க்கும் எண்ணங்களுடனல்லவா தினறிக்கொண்டிருக்கிறார்! அவர் ஒரு தந்தை. எந்தத் தந்தையாலும் அதை அவ்வளவு சுலபமாக மறந்துவிடமுடியாது.

இரு யுகங்களல்ல, இரு மாதங்கள் மட்டுமே கழிந்திருக்கின்றன. கறுப்பு அங்கிகளும், அவற்றின் ஒளித்தகம் கொண்டு "சட்டத்தின் காவலர்கள்" என்ற பெயரில் நடமாடும் வக்கீல்களும், நீதிபதிகளும் இதோ கண்முன் நிற்கிறார்கள். நாடகம் ஆரம்பமாகிறது. குற்றவாளிக்கூண்டில் மகன் சுப்பிரமணியம்; தந்தைபார்த்துக்கொண்டேயிருக்கிறார். கனகசபை "தன்னிஷ்ட" ருமாக்கற்றைகளின் மீது ஏறிநின்று பாய்ந்து பாய்ந்து அவ்வக்கில் கேட்ட கேள்விகள் சுப்பிரமணியத்தை மூச்சுத் திணறவைக்கின்றன. அப்புயலில் உண்மை எங்கோ அடித்துச்செல்லப்படுகிறது. ஏதேதோ நடக்கிறது! அலசி ஆராய்ந்து, அடிக்குரலில் முழக்குகிறார்கள். 'ஏழு வருடம்' என்ற வார்த்தை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறது. நமசிவாயத்தின் நெஞ்சில் எவ்வித உணர்ச்சியுமில்லை எதிர்பார்த்தது தான். ஏழ்மைக்குச் சாட்சியாக உண்மை நின்றாலும், பொய்புரட்டுக்கு சாட்சியாக பணபலம் நின்றாலும் நீதிமன்றம்வரை வெல்வதென்னவோ பிந்தியதுதான் என்பதை அவர் அறிவார். அப்படியானால் அதோ நீதிபதியின் தலைக்கு நேர்மேலே சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் சாந்திமகானின் படம் இருக்கிறதே அது ஏன் அங்கு வைக்கப்பட்டிருக்கிறது? அதற்கு அர்த்தமென்ன? இத்தனை படித்தவர்களில் எவர் கண்களிலும் அது உறுத்தவில்லையா? அது இங்கே இருப்பதுபற்றி எவருமேவெட்கப்படவில்லையா?

தந்தை பொறுத்துக் கொண்டார்; தமையனோ கொதித்தெழுந்தான். அன்பையும் பாசத்தையும் அள்ளிச் சொரிந்த அண்ணன் அநியாயமாக சிறைசென்றதை எண்ணியபோது அவளது உள்ளம் பற்றியெரிந்தது. கள்ளநோட்டு அடிக்கும் கைமுதலாளி கனகசபையைப்பற்றி ஊரெல்லாம் அறிந்திருந்தபோது கல்யாணிக்கு மட்டும் அது தெரியாமலிருக்குமா? கள்ள நோட்டு அடிப்பதும், மாட்டிக்கொள்ளும்போது யாராவது தலையிலாவது அப்பழியைப் போட்டுவிடுவதும் அவனது வாடிக்கை. அது தன் அண்ணன் தலையிலேயே விழுந்தது. செய்யாத குற்றத்திற்காக சிறைசென்றதைக் கேட்டவுடனேயே "அந்தக் கயவன் என்றாவது என் அண்ணன் காலில் விழுந்து கதறப் போவது நிச்சயம்" என சிலம்பின் செல்வி கண்ணகிபோல சாபமோ சபதமோ இட்டுவிட்டாள் கல்யாணி. இன்றும் அது காதில் ஒலிக்கிறது. சுப்பிரமணியம்கூட சிறுவயதில் சிறிது முரட்டுக் குணமுடையவன். சிறையில் இருந்துகொண்டு என்னென்னவெல்லாம் எண்ணுகிறானோ...? ஒருவேளை பழிக்குப்பழி... வஞ்சத்துக்கு வஞ்சம் என்று அப்படியும் ஏதும் வெறி ஆட்டம் ஆடிவிடுவானோ...!

"மழை தூறுவது கூடத் தெரியாமல் அப்படி என்னவோ சிந்திக்கிறீர்களப்பா-!" மகளது குரல் நமசிவாயத்தின் சிந்தனைக் கதவுகளை மூடிற்று. வானம் இருண்டுகொண்டிருந்தது.

0 0

இருண்டு போயிருந்த வானத்தில் முகிற்திரைகள் விலகி எங்கும் ஒளிவெள்ளம் பரவியது போன்றிருந்தது சுப்பிரமணியத்தின் உள்ளத்தில். காற்றும் கடுமையாட்டாத கற்சிறைக்குள் ஏழு வருடங்களைத் தொலைத்துவிட்டு, இறுதியில் விடுதலை பெற்று வெளியே வந்து நின்றபோது அவனதுடலை ஸ்பரிசித்துச்சென்ற திறந்த வெளியில் தவழ்ந்துவந்த சுதந்திரக்காற்று உள்ளத்தில் ஒரு புதுத் தெம்பை ஊட்டிற்று. இப்படி வயற்கரைகளிலும், கடற்கரைகளிலும் காற்று வாங்கி எவ்வளவு காலமாகிறது. அந்தக் காலம் மீண்டும் கனிந்து வந்துவிட்டபோது வாடைக் காற்று அவனுடலை வருத்தவில்லை; கொடுவெயில் அவன் பாதங்களைச் சுட்டெரிக்கவில்லை. எதையும் இலட்சியம் செய்யாது, இதுவரை தஞ்சமளித்த சிறையை ஒரு தடவை பார்த்துவிட்டு, சுதந்திரத்தின் ஒவ்வொரு சிறுதுளியையும் ரசித்தவாறே நடந்தான்.

ஆனாலும் விடுதலை அவனுக்கு இனிப்பதாகத்தெரியவில்லை. வேண்டியதைச் செய்துமுடிக்குமட்டும் விடுதலையும் ஒரு வெற்றியா? விடுதலை அவனுடலுக்கன்றி அவனுள்ளத்துக்கல்லவே! கொந்தளிக்கும் குரோத உணர்ச்சியின் கொடும்பிடிக்குள் சிக்கி அவனுள்ளம் எரிமலையாய் குமுறிற்று. தேறுதற்கு எப்போது விடுதலை? அந்தக் குரோதத்தைத் தீர்க்கவேண்டும்- அப்போது தான் உள்ளம்விடுதலையடையும் ஏழு வருடங்களில் நான்கு சுவர்களிடையே ஒய்ந்திருந்த போதெல்லாம் தன் தள்ளாத தாய்தந்தையரின் முகங்களும் தங்கை கல்யாணியினது அன்பு முகமும் கண்முன்னே தோற்றும். கல்யாணியைக் கல்யாணக் கோலத்தில் கண்டு களிப்பதற்கான ஏற்பாடுகளில் சுப்பிரமணியம் இறங்கிய சமயத்தில் தான் சிறைக்கதவுகள் அவனை அழைத்துக் கொண்டன. தமையன் தலையில் சட்டம் சுமத்திய திருட்டுப்பட்டமும் சிறைவாசமும் தங்கைக்கு ஏற்பட்டிருந்த உயர்ந்த இடத்து வரனை மட்டுமல்ல எவரையுமே கல்யாணியை நாடவிடவில்லை. இவ்வாறு தங்களது வாழ்வையே சீர்குலைத்துவிட்ட முதலாளி கனகசபையை எண்ணும்போது அவனுள்ளக்கனலின் அனலை வர்ணிக்கமுடியாது. கனகசபையை மனக்கண் முன்னே நிறுத்திவைத்து முறைப்பான், விழிப்பான், கற்பனைக் கட்டாரியால் குத்திக்குதறுவானாகக் கிழித் தெறிவான். ஏழு வருடமாக இவ்வாறு அவனுள்ளத்தில் வளர்ந்துவந்த கோபக்கனல் சாம்பல்பூத்த செந்தணல்போல வெளியே தோற்றவில்லையாயினும் உள்ளே எரிமலைக் குழம்பாக குமுறிக்கொண்டிருந்ததை அவன் மட்டுமே அறிவான். அந்தவெறியில் எதையுமே இலட்சியம் செய்யாது சாலை மீது கடுகி நடந்தான் சுப்பிரமணியம்.

ஏழுவருடங்களுக்கு புதுமைகள் பூத்துப் பொலிந்திருந்தன பட்டினத்தில். சிலந்திப்பின்னல் போன்ற சாலைகளும் தேன் கூடுபோன்ற பின்னப்பட்ட கட்டிடங்களும்இயற்கையை மனிதன் நன்கு புரிந்துகொண்டதை எடுத்துக்காட்டுகின்றன. நிற்க நேரமின்றி எட்டிநடப்பவர்களும், அவர்களைத் தட்டிவிழுத்தி எலும்பைத் தவிடுபொடியாக்கி விடுவதுபோன்ற வாகனங்களும் உள்ளதனுற்றான் போலும் இப்பட்டினத்தில் இத்தனை பெரிய ஆஸ்பத்திரியையும் கட்டிவைத்திருக்கிறார்கள் என எண்ணியவாறே அவ்வாஸ்பத்திரியைக் கடந்து நடந்தான் சுப்பிரமணியம்.

ஆஸ்பத்திரியைத் தாண்டி அப்பால் நடந்தபோது சாலை ஓரமாக ஒரு சனக்கும்பல் கூடியிருப்பது தென்பட்டது. வேலையற்றவர்கள் வேலி போட்டு நின்று எதையோ பார்த்துக்கொண்டிருக்க, நேரமற்றவர்கள் ஒருமுறை உள்ளே எட்டிப்பார்த்து விட்டு மூதத்தை அறுபது கோணங்களாக கணித்துக் கொண்டு அகன்றார்கள். சுப்பிரமணியமும் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான் எட்டிப்பார்ப் தவன் மெய்சிலிர்த்து நின்றான்.

பரிதாபம்! எலும்புருவமொன்று முழங்கால்களிலும் கைகளிலும் இரத்தம்கசிய சாலைமீது விழுந்துகிடந்தது. சாலையை குறுக்கேதாண்டிய போது வாகனமொன்று இலேசாக தட்டிவிட்டுச் சென்றதாம். அந்த மனிதன் ஆஸ்பத்திரியிலிருந்து வாங்கிக்கொண்டுவந்திருந்த சிவப்புநிற மருந்தும் இப்போது சிதறி உடைந்ததால் வெளியே மண்மீது சிதறி செங்குருதியுடன் சங்கமமாகியிருந்தது. கூனிப்போய் தகிக்கும் சாலைமீது வெந்து கொண்டிருந்த அந்த வெற்றுடலைப் பார்த்து, காலில் செருப்புடனே கடுகளவு சூடும் பாதங்களில் ஏறாது நின்ற கனவான்கள் மனமிரங்கினார்கள். விதியின் கொடுமையென்றார்கள். 'அவன் தலையெழுத்து அப்படி' என்று கண்டுபிடித்துக் கூறியவர்கள் பலர். ஆனால் எவருமே செய்யவேண்டியதைச் செய்ய நினைத்தவர்களாகத் தெரியவில்லை.

சுப்பிரமணியத்தின் நெஞ்சு துடித்தது. செயலிழந்து மூர்ச்சித்து வீழ்ந்து கிடக்கும் நோயாளிஒருவனை வேடிக்கைப் பொருளாக மாற்றி வேலிபோட்டுக் கும்மலாய் கூடிநின்ற கையாலாகாத கூட்டத்தை இடித்து விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான். "ஐயா யாராவது உதவிசெய்யுங்கள்— இவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச்செல்லலாம்" என்றான் சுப்பிரமணியம்.

மானிடஇனத்திற்கே காது செவிடாகிப் போய்விட்டதா? விதியைச்சபித்தவர்கள், காலத்தை கலிகாலம் என்றனர்கள். கடவுளைக் கண்கெட்டவன் என்றவர்கள் - எவருமே இப்போது வாய்திறக்கவில்லை. மறுமுறையும் அதையேதிருப்பிக் கேட்டான் சுப்பிரமணியம். ஆனால் அதைக் காதில் வாங்கிக்கொள்ள அவன்மட்டும் தான் அவ்விடத்தில் நின்றிருந்தான். உற்றுயிராய்க் கிடக்கும் சகபிறவி ஒருவனை கூப்பிடுதொலைவிலுள்ள ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லும் பணிக்குப் பயந்து ஒவ்வொருவராகமெல்ல நழுவும் மானிடர்களைப் பார்த்துக்கொண்டிருப்பதில் பயனில்லை எனக்கண்ட சுப்பிரமணியம் கீழே கிடந்த மனிதனை ஒருமுறைநோக்கினான். உடலின் பலத்தையெல்லாம் கைகளில் திரட்டி அவ்வுடலைத் தூக்கித் தோள்மீது சுமந்து ஆஸ்பத்திரிநோக்கி நடந்தான், மயங்கிப்போயிருந்த அம்மனிதனை ஆஸ்பத்திரியினுள்ளே கொண்டு சென்றார்கள் சுப்பிரமணியம் வெளியே காத்து நின்றான்.

பத்து நிமிடங்களில் மயக்கம் தெளிந்த அம்மனிதன் கையில் மருந்துப்புட்டி யொன்றுடன், மயக்கத்தின் சாயம் முற்றாக நீங்காத நிலையில் பலவீனமும் சேர்ந்து கொண்டதால் தள்ளாடியபடியே எங்கோ பார்த்துக்கொண்டு நடந்து வந்தான். ஒரு கணம் சுப்பிரமணியத்தின் பார்வை அவனுடலின் மீது நிலைத்தது. அவன்... அந்தச் சுருண்டகேசமும், தெளிந்த நெற்றிப்புருவங்களும்... கனகசபை ஆமாம் அவனேதான். சந்தேகமில்லை ஒட்டி உலர்ந்த முகமும் அதை மூடிய உரோமக்காடுமாக படைத்தவனே வந்து பார்த்தாலும்புரிந்து கொள்ளமுடியாததபடி கோலம் மாறிப்போயிருப்பது கனகசபைதான்

சுப்பிரமணியம் சட்டென முகத்தைத் திருப்பிக்கொண்டான். சிறைகொடுத்திருந்த சீர்வரிசைகள் சுப்பிரமணியத்தின் தோற்றத்தைப் பெரிதும் மாற்றிவிட்டிருந்ததால் கனகசபை அவனைக் கண்டுகொண்டிருக்க முடியாது. அவனது உள்ளம் உயர்ந்த சிகரத்தின் உச்சியிலிருந்து உருண்டு விழுந்தது. விழுந்த உள்ளத்தை மோதித் தவிக்கும் அலைகள் வானத்தில் எறிந்தன. அவனது உணர்ச்சிகள் நெஞ்சத்தை வானத்திற்கும் பூமிக்குமாக பந்தாடி இறுதியில் அடங்கி ஒடுங்கி ஒய்ந்தன. குழந்தை பலூனை ஊதி ஊதி வளர்க்கும்போது பட்டென அது வெடித்துப்போவதில்லையா? அதுபோல ஏழு வருடங்களாக உள்ளத்திலே ஊறிஊறி நாடி நரம்புகளெல்லாம்செறிந்துவளர்ந்து வந்த அந்தக் கொலைவெறி ஒரு கணத்தில் இருந்த சுவடேதெரியாமல் புதைந்து போனது எப்படியென அவனுக்கேபுரியவில்லை. மேலும் அங்கே நின்றுகொண்டிருந்தால் என்ன விபரீதம் நிகழுமோ?

வேகமாக நடக்க ஆரம்பித்த சுப்பிரமணியத்தின் பாதங்களை இரு கரங்கள் கட்டிக்கொண்டன. அந்த மனிதன் நெடுஞ்சாண்கிடையாக அவனது கால்களில் வீழ்ந்து 'நீங்கள் ஒரு தெய்வம் ஐயா' என்றான். சுப்பிரமணியத்திற்கு என்னவோ போலிருந்தது. "சே! இது என்ன! எழுந்திரு" என்று கூறிவிட்டுதன்வழியே நடக்க ஆரம்பித்தான்.

அந்த மனிதனும் பின்னாலேயே வந்தான். சுப்பிரமணியத்திற்கோ அவன் தன்னை விட்டாற் போதுமென்றிருந்தது. நடையில் வேகத்தைத் திணித்தான். அப்படியும் அவன் விடுவதாயில்லை: "ஐயா... உங்களைக் கடவுளைப் போலவே எண்ணுகிறேன். மனமும் கசிந்துவிட்டால் என் போன்ற அநாதைகளுக்கெல்லாம் பின்புதுணை யேது?" என்றான். சுப்பிரமணியத்தால் சகித்துநிற்கவும் முடியவில்லை; பேசாதிருக்கவும் முடியவில்லை. "ஏன் உன்னை அநாதை என்கிறாய்?" என்று கேட்டுவைத்தான்.

"என் படாடோப வாழ்க்கை காலையில்தான் கண்ட கனவுபோலத் தோற்றுகிறது இன்று எவருமே கவனிக்காத அநாதைதான்" அவன் குரல் கரகரத்தது. தொடர்ந்து வந்த மௌனம் அவனது சிந்தனை கடந்துபோன காலத்தில் சஞ்சரித்ததைக் காட்டிற்று. இரண்டு நிமிடம் எதுவுமே பேசாது அடுத்து வந்த சந்தியைக்

(10-ம் பக்கம் பார்க்க)

ரூபா 1000/- தொடக்கம்
ரூபா 5000 - வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறைவீதி யாழ்ப்பாணம்.

## வடக்கில் தொழில் வளம் — 7

# உள்ளூர் மூலப் பொருள்களில் வளமான தொழிற்சாலை

'கேட்'டைத் திறந்தவுடன் அலுவலக அறை! அழகாகவும், மிகவும் கச்சிதமாகவும் உள்ள அந்த அலுவலக அறையைப் பார்த்த எடுப்பிலேயே ஏதோ கல்லூரிக்குச் சொந்தமான அலுவலகம் என்றுதான் எண்ணத்தோன்றும். ஆனால் அதுவன்று! மிக மிகத் துரிதமாக வளர்ந்து வரும் 'மில்க்வைற் சோப்' தொழிற்சாலைக்குச் சொந்தமான அலுவலக அறையாகும். காந்தி, நேரு ஆகிய பெரியார்களின் படங்கள் அந்த அறையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. முழுத்துக்கு ஓரிடமாக பெரியார்களின் மணிவாக்குகள் தொங்கவிடப் பட்டுள்ளன. அவற்றுள்,



தொழிற்சாலையின் முகப்புத் தோற்றம்

"கடமையைச் செய்" "காலத்தை வீணடிக்காதே" என்ற வாக்கியங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. ஒரு தொழிற்சாலைக்கு மிக இன்றியமையாத வாக்கியங்கள் இவை என்பதை உணர்ந்து கொண்டேன்.

### 1927-ல் ஆரம்பம்

வடக்கில் மூலப்பொருள்களோ யந்திரங்களோ கிடைக்காத சக்தியில் இங்குள்ள கைத்தொழில்கள் யாவும் குடிசைக் கைத்தொழில்களாகவும், சிறியவுக் கைத்தொழில்களாகவுமே அமைந்துள்ளன. இந்த வகையிலே திரு. மு. கந்தையாபிள்ளை அவர்களால் 1927-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான், "மில்க்வைற் சோப்தொழிற்சாலை"

**விமலா**

யாகும். ஆனால் இன்று இந்த 44 வருடங்களில் இத்தொழிற்சாலை மிகத் துரித வளர்ச்சியடைந்துள்ளது என்பதை இத்தொழிற்சாலையைச் சுற்றிப்பார்த்தவர்கள் உணர்ந்து கொள்வார்கள். இந்த 44 வருடங்களிலும் எத்தனையோ கஷ்டங்களையெல்லாம் தாண்டி இன்று வடபகுதியில் தனக்கென ஒரு உயரிய ஸ்தானத்தைப் பொதுமக்களிடம் பெற்றுள்ள இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் நாலுதொன் சவர்க்காரத்தை உற்பத்திசெய்கிறது.

சவர்க்காரம் செய்வதற்கான கோஸ்டிக்சோடா, தேங்காயெண்ணெய் ஆகிய மூலப்பொருள்களை நாங்கள் உள்நாட்டிலேயே பெற்றுக்கொள்கிறோம். 75 வீத மூலப் பொருள்களை உள்நாட்டிலேயே பெற்றுக்கொள்வதால், எங்களுக்கு அந்நியசெலாவணியைப் பற்றிய கவலையே இல்லை என்றார், இத்தொழிற்சாலையின் உரிமையாளரும் அதிபருமான திரு. க. கனகராஜா. இம்மூலப்பொருள்களை எங்கிருந்து பெறுகிறீர்கள் என அறியும் ஆவலுடன் நீங்கள் மூலப்பொருள்களை எங்கிருந்து பெறுகிறீர்கள் என்று கேட்டேன். கோஸ்டிக் சோடாவை பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையிலிருந்தும் தேங்காயெண்ணெயை குருநாகல், சிலாபம், புத்தளம் போன்ற இடங்களிலிருந்தும் பெற்றுக்கொள்கிறோம். மிகுதி 25 வீதம் மூலப்பொருள்கள்தான் இந்தியா, சீனா, ஜப்பான் இங்கிலாந்து ஆகிய இடங்களிலிருந்து பெறுகிறோம் எனப் பதிலிறுத்தார் அதிபர் திரு. கனகராஜா.

### இயந்திர சாதனங்கள்

தொடர்ந்து அங்குள்ள யந்திரங்கள் பற்றியும் அவற்றில் இங்குள்ள யந்திரங்கள் யாவும் எவ்வளவு பெறுமதியுடையன? அவற்றை வெளிநாடுகளிலிருந்து தானே இறக்குமதி செய்துள்ளீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சுமார் 35,000 ரூபா பெறுமதியிருக்கும், இத் இத்தொழிற்சாலையில் இயங்கும் யந்திரங்கள் யாவும் எந்த நாட்டிலிருந்தும் இறக்குமதியாக்கப்படவில்லை. பழுதடைந்த மோட்டார், லொறி வாகனங்களின் உதிரிப்பாகங்களினால் ஆக்கப்பட்டவையே இந்த யந்திரங்கள்.

இந்த யந்திரங்களை இயக்குவதற்கும் பெரும் உதவிசெய்த தொழிலாளி திரு. நாராயணசிங்கம் என்ற அவர், அத் தொழிலாளியின் புகைப்படத்தை எனக்குக் காண்பித்தார். இத்தொழிலாளிக்கு மலர்மாலை அணிவித்து, வாழ்த்துப்பாடியும் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு தொழிலாளியின் திறமைக்கும் பாராட்டி அவருக்கு அளித்திருந்த வரவேற்பை புகைப்படங்கள் மூலம் கண்டறிந்த நான் இத்தொழிற்சாலை முதலாளி தொழிலாளர்களின் திறமைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, அன்பாக நடத்துகொள்கிறார் என்பதைப் புரிந்துகொண்டேன்.

### சோப் தயாரிப்பு

காய்ச்சிய தேங்காயெண்ணெயையும், கோஸ்டிக் சோடாவையும், நீலப்பவுடரையும் ஒரு பெரிய யந்திரத்திலிட்டுக் காய்ச்சுகிறார்கள். அவை சூடேறிக் குழம்பாக பெரிய பெரிய தொட்டிகளில் ஊற்றப்படுகின்றன. இவைகள் காய்வதற்காக மூன்று நாட்களுக்கு அப்படியே விட்டுவைப்பார்கள் பின்னர் அவற்றை இன்னொரு யந்திரத்திலிட்டு ஓர் அடி சதுரமும் 3 அங்குலத் தடிப்பும்கொண்ட 'ஷீட்'டுகளாக வெட்டுகிறார்கள். பின் அந்த ஷீட்டுகளை இன்னொரு யந்திரத்திலிட 'மில்க்வைற் சவர்க்கார' அளவில் வெட்டி வெளியே தள்ளுகின்றன. அந்தசோப்புகளுக்கு இறுதியாக முத்திரை பொறிக்கப் பட்டு 'லேபல்'களில் சுற்றி விற்பனைக்குத் தயாராகின்றன. இந்த சோப் குழம்பு ஊற்றப்படும் தொட்டிகள், வெட்டும் யந்திரங்கள், முத்திரை பொறிக்கப்படும் யந்திரங்கள் ஆகியவையும் உள்நாட்டு உற்பத்தியாகும்.

### வாய் பேசாதவர்க்கு வேலைவாய்ப்பு

சுமார் 75 பேர் வேலை பார்க்கிறார்கள். அவர்களுள் 5, 6 பேர் வாய்பேச முடியாத அங்கம் குறைந்தவர்கள். அவர்களை அறிமுகம் செய்துவைத்தார், அதிபர். புன்சிரிப்பால் எனக்கு வணக்கம் தெரிவித்த அந்த வாலிபர்கள் சுறுசுறுப்பாக முத்திரை பொறித்தல், லேபல் சுற்றுதல், 50, 72 சோப்புகள் கொண்ட பார்சல்களையும், 144, 288 கட்டிகள் கொண்ட பெட்டிகளையும் வெளியூர்களுக்கு விநியோகிப்பதற்காக தயார் செய்து கொண்டிருந்தார்கள். இத்தொழிற்சாலையில் தயாராகும் மில்க்வைற் நீல சோப், மில்க்வைற் பார்சோப், மில்க்வைற் வாசனைச்சோப், மில்க்வைற் சலவைப்பவுடர் யாவும் இங்குதான் பார்சல் பண்ணப்படுகின்றன. இவை



தொழிற்சாலையின் ஸ்தாபகர் திரு. க. கனகராஜா.

தயாராகியதும் ஒன்பது மோட்டார் வாகனங்களை இலங்கையின் சகல பாகங்களுக்கும் கொண்டு சென்று விற்பனையாக்குகின்றன. இதற்கான மரப் பெட்டிகளைத் தயாரிக்கித் தருவதன் மூலம் பத்து சிங்களக் குடும்பங்களின் சீவியம் நடக்கிறது என்றும் திரு. கனகராஜா கூறினார். இவ்வளவு பேருக்கும் தொழில்வாய்ப்பளித்து வரும் இத்தொழிற்சாலை உரிமையாளர் திரு. கனகராஜா சிறந்த கடவுள் பக்தரும், காந்தியவாதியுமாவர்.

தம்முடைய முயற்சி இம்மட்டுமல்ல சமய நூல்களையும், பெரியார்களின் மணிவாக்குகளையும் அச்சிட்டு இலவசமாக மக்களுக்குக் கொடுப்பதே என்று கூறி இதுவரை வெளியிட்ட 33 வெளியீடுகளைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். புற அழுக்கைப் போக்க சவர்க்காரத்தைத் தயாரிக்கிறீர்கள்; அக அழுக்கைப் போக்க சமய நூல்களை வெளியிடுகிறீர்கள் போலும் என்றேன் நான்.

### தந்தையார் செய்த தொழில்

தகப்பனார் திரு. மு. கந்தையாபிள்ளை தொடக்கி வைத்த சவர்க்காரத் தொழிலை விடாமுயற்சியோடு தொடர்ந்து செய்து வருகிறார் திரு. கனகராஜா. அந்த நாட்களில் பெற்றோருக்கு உதவியாகத் தாம் 'சைக்கிளிலும்' ஒற்றைத் திருக்கை வண்டியிலும் கொண்டுசென்று விற்பனை செய்ததையும் தெரிவித்தார். இவருடைய விடா முயற்சியின் பலனாக இன்று வடபகுதி மக்கள் அதி வெண்மையையும், பிரகாசத்தையும் தரக்கூடிய சவர்க்காரங்களைப் பெறக் கூடியதாகவிருக்கிறது.

இத்தொழிற்சாலையை மேலும் விருத்தி செய்வதற்கான நோக்கம் உண்டா என்று நான் கேட்டபோது இத்தொழிற்சாலை ஐந்து பரப்பில் கட்டப்பட்டுள்ளது என்றும் 'நூற்றுக்கு நூறு' இடம் போதாதிருக்கிறது என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் உதவி கிடைக்குமானால் தானே இயங்கும் இயந்திரங்களை இறக்குமதி செய்து தற்போது உற்பத்திசெய்வதை விட பன்மடங்கு பெருந்தொகையாக உற்பத்தி செய்ய முடியும் என்றார். குளிர்சாதன இயந்திரம் இல்லாமையால் 'சோப் குழம்பு' காய்வதற்கு மூன்று நாட்கள் பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது என்றும் தொழிலாளர்கள் மிகப் பிரயாசப்பட்டுச் செய்வதையும் விவரித்தார்.

தூயவெண்மையைத் தரக்கூடிய 'மில்க்வைற் நீல சவர்க்காரத்தையும், உடம்பிலுள்ள அழுக்கு வியர்வையைப் போக்க வாசனைச் சோப்பையும், பெண்கள் இலகுவாக அழுக்குத் துணிகளைக் கசக்கி எடுக்கக்கூடிய வகையில் நல்ல முறையில் தயார் செய்யப்பட்ட மில்க் வைற் சலவைப் பவுடரையும் தயாரித்தளிக்கும் இத் தொழிற்சாலைக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு என்பது வெளிப்படை.

அதி பிரகாச சலவைக்கு

யாவரும் விரும்புவது

மில்க்வைற்

நீல சோப்




மில்க்வைற் சோப் தொழிற்சாலை,

தபால் பெட்டி இல. 77 - யாழ்ப்பாணம். 3111

# நம்மை அவமானப்படுத்தும் நம்மவர்களை முதலில் ஒதுக்குங்கள்!

தமிழகத்திலிருந்து கொழும்புக்கு வந்த தமிழ்த் திரைப்பட டைரக்டர், வார்த்தைகளை அளந்து பேசாமல் 'உளறி'க்கொட்டி விட்டுப்போய்விட்டார்!

"யாழ்ப்பாணத் தமிழில் பேசி, படமொன்றைத் தயாரித்து அதனைத் தமிழகத்தில் வெளியிட்டால் அந்தப்படத்தை வேடிக்கை பார்க்க ஏராளமானவர்கள் கூடுவார்கள்" என்ற கருத்துத் தொனிக்க திருவாய்மலர்ந்தாராம் அவர்!

### புதிய பிரச்சினை அல்ல

ஈழத்து கலை இலக்கியத் துறையைப் பொறுத்தவரையில் இது புதிய பிரச்சினையல்ல!

காலத்துக்குக்காலம் தமிழகத்திலிருந்துவரும் "பெரியார்கள்" உதிர்த்துவிட்டுச் செல்லும் 'முத்து'க்கள். இங்குள்ள கலை இலக்கியக்காரர்களையும், நாட்டுப்பற்றுள்ள தன்மானமிக்கவர்களையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளன.

பகீரதனின் "பத்து வருட இலக்கிய பின்தங்கல்" கண்டுபிடிப்பிலிருந்து "அடிக்குறிப்பு" ஆராய்ச்சியும். அதனையடுத்து ஆனந்தவிகடன் "மணியனின்" 'நாவலரா? அப்படியானால் நாவலர் நெடுஞ்செழியனு' என்ற அதிஅற்புத மனதைப் புண்படுத்தக்கூடிய நகைச்சுவையும் இந்த நாட்டை எள்ளி நகையாடவைத்திருக்கிறது!

### 'பிஸினஸ்' பெரியார்

சமீபத்தில் இங்கு வந்தவரான 'பெரியார்' ஏ. எஸ். நாகராஜன் என்ற "கொச்சைத் தமிழ்ப்பட" டைரக்டரும் பெரியதோரு கருத்தைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

'பிஸினஸ் பெரியார்' ஏதோ சொல்லிவிட்டுப் போய்விட்டார் —

ஆனால் இங்கு கலைவளர்ச்சிக்காகத் தம்மையே அர்ப்பணித்து "கலையே உயிர் மூச்சாக" வாழ்பவர்களை எவ்வளவு தூரம் இந்தக் கருத்துப் பாதித்திருக்கிறது என்பது அவருக்கு எப்படித் தெரியப்போகிறது?

ஆனாலும்—

ஏ. எஸ். நாகராஜன் சொன்ன கருத்தைப்பற்றி சற்று நிதானமாக நின்று சிந்திக்கும்போது—

"யாழ்ப்பாணத் தமிழில் பேசி சினிமாப்படம் தயாரித்து தமிழகத்தில் வெளியிட்டால் வேடிக்கைபார்க்க ஏராளமானவர் கூடுவார்கள்......" என்றுதானே சொன்னார். ஆனால், அவர் சொன்ன அதே 'யாழ்ப்பாணத் தமிழை' பேசவைத்து, பெரிய நகைச்சுவை என்று சொல்லி, நாடகங்கள் போட்டு யாழ்ப்பாணத்துத் தமிழுக்கும், யாழ்ப்பாணத்து மக்களுக்கும் அவமானத்தையும், இழுக்கையும் தேடித்தரும் இவர்களை 'கொறுக்கி'க் கலைஞர்களைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டும்!

""எனை ஆச்சி எப்பிடி இருக்கிறாய்.........அவன்ரை பொடிச்சி யாரோடையோ ஓடிவிட்டாளாம்......என்பது போன்ற வசனங்களை முழுக்க முழுக்க எழுதி, அவைகளுக்கு நகைச்சுவை நாடகங்கள் என்று வேறு 'லேபல்' போட்டு கொழும்பில் மேடையேற்றுகிறார்கள். கறுவாக்காட்டுக் கொழும்பு 'டமிளர்கள்' அதைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். வேடிக்கை பார்க்கக்கூடுகிறார்கள்!

### புளித்துப் போய்விட்டது

புளித்துப்போன "புரோக்கர்", 'லண்டன் சந்தையார்'க்களை இந்த மாதிரி யாருமே பேசாத 'யாழ்ப்பாணத் தமிழை' வைத்து வெற்றி தேட நினைப்பவர்களது 'முகமூடி' நீண்ட நாட்களுக்கு நிலைக்காது!

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் ஏதோ கொழும்பில் போய் கொஞ்ச நாள் அந்த 'லை சொசைட்டியுடன்' உறவுகொண்டவுடன், யாழ்ப்பாணத் தமிழின் இனிமையை மறந்து யாழ்ப்பாணத்துக்கு தேடக்கூடிய விதத்தில் நாடகம் போட்டுப் புகழ்தேடப் பார்க்கிறார்கள்!

இவர்களது நாடகங்களில் பேசுவதுபோன்று எங்காவது யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசுகிறார்கள் என்று இந்த நாடகத்தை மேடையேற்றும் பிரபல கலைஞர்களால் நிரூபிக்கமுடியுமா என்று சவால் விடுகிறேன்.

புளித்துப்போன "புரோக்கர்", 'லண்டன்' சந்தையார்க்களை முடித்துக்கட்டிவிட்டு சமுதாயத்துக்கேற்ற நல்ல நாடகங்களைத் தயாரியுங்கள்.

### ஒதுக்குங்கள்

சோஷலிசப் பாதையில் நாடுசென்றுகொண்டிருக்கும் இந்த நேரத்தில், அரசின் முற்போக்குத்திட்டங்களை செயல்படுத்தக்கூடியவற்றை, அன்றாட மனிதப் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட நாடகங்களை மேடையேற்றுங்கள்! அந்தச் சிந்தனைத் தெளிவும், ஆற்றலும், திறமையும் இல்லாவிட்டால் நாடக உலகத்தை விட்டு ஒதுங்குங்கள்! இல்லாவிட்டால்-நிச்சயம் நீங்கள் ஒதுக்கப்படுவீர்கள்!

### என்ன சொல்கிறீர்கள்

இப்போது என்ன சொல்கிறீர்கள்?

'சினிமாப்பெரியார்' நாகராஜன் சொன்ன கருத்து மேற்சொன்ன எனது விஷயங்களைப் படித்த பிறகு பெரியவிஷயமாகத்தோன்றியிருக்காது.

முதலில்—

நம்மவர்களை அவமானப்படுத்தும் நம்மவர்களைஒழித்துக்கட்டவேண்டும்.

பிறகு—

'இறக்குமதிப் 'பெரியார்களை' அறவே ஒழித்துக்கட்டுவது பெரிய விஷயமாக இருக்காது.

★ பாமா ராஜகோபால்




# ஈழத்து தமிழ் நாடகக் கலையை வளர்த்த பெரியார்கள் யார்?

## பழைய பரம்பரை பேசுகிறது — 1

முத்தமிழில் ஒரு தமிழாம் நாடகத்தமிழ்; அந்தமிழை ஆதாரமாகக் கொண்டது சம்பிரதாய பூர்வமான நாடகக்கலை. அக்கலையை தொழிலாகக் கொண்டு இலங்கையில் நாடகங்களை நடித்தவர்களும் நாடகங்களை மாணவர்களுக்குப்பயிற்றுவித்தவர்களும், நாடகங்களை எழுதியவர்களும்யார்?

இவர்களை நாடகக்கலை உலகு மறந்துவிட்டதா? அல்லது உண்மை தெரிந்தும் மறைத்துவிட்டதா? ஆம், மறைக்கப்பட்டுவிட்டது! உண்மை மறைக்கப்பட்டு விட்டது.

குருகுல வாசமாக சம்பிரதாயமாக நாடகக்கலையைப் பயிலாத 'போலி' நாடக நடிகநடிகர்களும், உண்மையான நாடகத்தமிழ் அல்லாத வெறும் கொச்சைத் தமிழை - நாட்டுத்தமிழைப் பேசி சொந்தப்பாடல் இல்லாமல் வெறும் சம்பாஷணை மட்டும் நாடகமென்றும் கூறுபவர்களாலும் எம்முன்னவர்கள் நடித்த நாடகங்களை கண்டோ, கேட்டோ அறியாமல் நாடகக்கலையைப் பற்றி பொது மேடைகளிலும், கலைமேடைகளிலும் புளுகுகின்ற பேச்சாளர்களும் நாடகக்கலை என்றால் என்னவென்றே தெரியாமல் தம்மையே நம் இலங்கையின்தமிழ்நாடக உலகில் 'பெரியார்கள்' என்று கூறுபவர்களாலும், உளறுபவர்களாலும், இலங்கையில் உண்மையான நாடகக் கலையை வளர்த்த பெரியார்களின் வரலாறுமறைக்கப்பட்டுவிட்டது.

### ஆதாரத்துடன்

இலங்கையில் 1875-ம் ஆண்டுமுதல் நாடகக்கலைக்காக அரும்பாடுபட்டு அக்கலையை வளர்க்க எத்தனையோ கஷ்டங்களை அடைந்த பெரியார்களின் வரலாறுகளையும் இலங்கையின் தமிழ் நாடகப்பெரியார்கள் யார் என்பதையும் ஆதாரபூர்வமாக இக்கட்டுரையில் தருகின்றேன். இக்கட்டுரையில் கூறப்படுவது அத்தனையும் உண்மை; எந்தப்பொது மேடையில் விவாதிக்கவும் உண்மையை ஆதாரபூர்வமாகக் காட்டவும் நான் தயாராக இருக்கின்றேன். அதுவுமல்லாமல் இலங்கையில் நாடகக்கலையைத்தொழிலாகக் கொண்டு மூன்றுதலைமுறையாக நாடகக்கலையை வளர்த்துவரும் பதியில் பிறந்து கடந்த முப்பது ஆண்டுகளாக நாடகக்கலையைத் தொழிலாகச் செய்து பல பாத்திரங்களும் தாங்கி நடித்துவருபவன் நான். எனவேதான் உண்மையை இன்றைய சமுதாயத்தினருக்கு உணர்த்தவேண்டியது எனது கடமை என்ற நோக்கோடு இக்கட்டுரையைத் தொடர்கின்றேன்.

இலங்கையில் நாடகக்கலைத்தொழிலாகக்கொண்ட கலைஞர்கள் பலர். இவர்களுள் நாடக அண்ணாவிமார்களாக, நாடகஆசிரியர்களாக, அனேகமாணவர்களைப் பயிற்றுவித்து இந்த ஈழத்திருநாட்டுக்குத் தந்தவர்கள் - பெருமைப்படுத்தியவர்கள் கௌரவிக்கப்படவேண்டியவர்கள் 'நால்வரே!' அவர்கள் முறையே நாதபுரமெனும் இணுவிலைச் சேர்ந்த அண்ணாவியார் சுப்பையா அண்ணாவியார் ஏரம்பமூர்த்தி, நெல்லியடியைச் சேர்ந்த கரவெட்டியில் வதியும் அண்ணாவியார் கிருஷ்ணன்வார்; முன்னாள் நடிகர் நாயகி அச்சக அதிபர் கே. சரவணமுத்து ஆகியவர்களே; இவர்கள் காலம் 1890-ம் ஆண்டு முதல் 1940-ம் ஆண்டுவரை இணுவில் அண்ணாவியார் சுப்பையா, அண்ணாவியார் ஏரம்பமூர்த்தி ஆகியவர்களும், 1925-ம் ஆண்டுமுதல் நெல்லியடி அண்ணாவியார் கிருஷ்ணன்வாரும் 1935-ம் ஆண்டுமுதல் கே. சரவணமுத்து இவர்களும் நாடக உலகுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார்கள். இவர்களுள் நெல்லியடி கிருஷ்ணன்வார் இன்றும் இருக்கின்றார். மற்றையவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். இந்த நால்வருமே இலங்கையின் தமிழ் நாடகவளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்கள். சரிநாடக சங்கீதத்தில் மிகப் பாண்டித்தியம்பெற்றவர்கள். நாடகக்கலை மட்டுமல்லாமல் நாட்டியம், காவடி ஆட்டம் போன்ற கலைகளையும் அனேகம் மாணவர்களுக்குப் பயிற்றுவித்தவர்கள். புகழ்பெற்ற கலைஞர்களாக மக்களால் மதிக்கப்பட்டவர்கள் அநேகம் நாடகங்களை எழுதியவர்கள்.

இலங்கையில் சில வருடங்களுக்கு முன் புகழ்பெற்று விளங்கிய அனேகநடிகர்களை உருவாக்கியவர்கள் இவர்களே. இவர்களால் வளர்க்கப்பட்ட உண்மையான நாடகக்கலை இன்று அழிந்து ஒழிந்துவிட்டது. பழமை பொருந்திய நடிகர்கள் ஒரு சிலரே இருக்கின்றார்கள். இவர்களும் மறைந்துவிட்டால் உண்மை முற்றாக மறைக்கப்பட்டுவிடும். 'போலி'க் கலை உலகமே தலைவிரித்தாடும். இலங்கையில் அனேகம் தமிழ் நாடக மன்றங்கள் இருந்தும் என்ன பிரயோசனம். ஒருசில நாடக மன்றங்களே உண்மையான நாடக முறைப்படி முறைப்படி பாடிநடிக்கும் நடிகர்களைப்புகுத்தி நாடகத் தமிழைப் பேசி நடித்துவருகின்றார்கள். மற்றவையெல்லாம் வெறும்சம்பாஷணையே இதை நாடகம் என்று கூறுகின்றார்கள்.

(தொடரும்)



கலைமணி எஸ்- வடிவேல்

## 'ஜெய்'யுடன் நடிகை பத்மினி

ஜெய்சங்கரும், குமாரி பத்மினியும் இணைந்து நடிக்கும் சுதா மூவீஸ் மூன்றாவது தயாரிப்பிற்கு 'சந்திப்போமா?' என்ற பெயர் வைத்துள்ளனர்.

மற்றும் இப்படத்தில் விஜய லலிதா, பண்டரிபாய், எம் ஆர் ஆர் வாசு, ஐ எஸ் ஆர் டைப்பிஸ்ட் கோபு, டி எஸ் சேஷாத்திரி, கே கண்ணன், ஜாமி வேலன் ஆகியோர் நடிக்கின்றனர்.

மர்மக் கதைகள் எழுதுவதில் பெயர்பெற்ற நாஞ்சில் பிடிசாமியின் மூலக்கதைக்கு க தேவராஜன் வசனங்களை எழுத, எஸ் எம் சுப்பையா நாயுடு இசையமைக்க, என் எஸ் வர்மா ஒளிப்பதிவு செய்ய, ஜி ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்

# ஒருத்தலை இடியும் . . . . சிகிச்சை முறைகளும்




"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வா [னென் றப்பானாற் கூற்றே மருந்து'

ஒருநாள் இரவு மப்பு மந்தாரமில்லா விடிமற்காலம். மணிக்கூட்டில் 4 மணி நேரம். ஒருவர் வந்து 'வைத்தியர் ஐயா' எனக் கூப்பிட்டுக்கொண்டு கதவைத்தட்டி எழுப்பினார். என்னவிட்டுக் காரிக்குத் தாங்கமுடியவில்லையாம் தலையிடி! இரவு முழுவதும் அழுதுகொண்டேயிருக்கிறாள் நித்திரையில்லாமல் தயவுசெய்து உங்களைக் கூட்டிவரட்டாம் என்றார். மாத்திரைச் செப்பைக் கையில் எடுத்துக்கொண்டு அரைமணி நேரத்தில் அந்த வீடுபோய்ச்சேர்ந்தோம் இருவரும்.

"பரிகாரியாரே! இராமுழுவதும் கொஞ்சநேரமாவது கண்மூடித் தூங்கவில்லை. வெடிக்குமாப்போல் இருக்கிறது என்மண்டை. இந்தத் தலையிடி தாங்கமுடியவில்லையே' என்று கூறினாள் அந்தப் பெண்ரோகி. அந்தவியாதியஸ்திரியை நன்றாகச் சோதித்துப் பார்த்தேன். பொருமிச் சிவந்து காணப்பட்டது முகமண்டலம். சிவந்த நீர் வடிந்துகொண்டிருந்தது ஒரு பக்கக்கண். அப்பக்கத்து மூக்காலும் நீர்வடிந்தது. குளிர்ச்சியாக இருந்தது உள்ளங்கால்; வரண்டிருந்தது நாக்கு; மூன்று நாட்களாக மலங்கழியாதிருந்த அம்மாதுக்கு இந்தவியாதி ஒருத்தலையிடிதானென்று நிதானித்தேன். என் செப்பைத் திறந்து ஒரு தைலக்குப்பியை எடுத்தேன். நாசியின் முரக்கொடுத்து வலியுள்ள பக்கத்தில் தைலத்தைச் சூடு பிறக்கத் தேய்த்தேன். தண்ணீரை வாய்க்கொள்ளச் செய்து ஒரு செந்தூரத்தை வாயிற்போட்டு விழுங்க வைத்தேன். அரைமணி நேரத்தில் வலி குறைந்து படுக்கையிற் சரிந்து தூங்கத் தொடங்கினாள் அம்மாது. நான் வீடுவந்துசேர்ந்தேன்.

## கொடிய வியாதி

ஒருத்தலையிடி ஒருகொடிய வியாதி; தாங்கற்கரியது. வைத்தியர்கள் மாத்திரமல்ல சாதாரணமக்கள் இதன் சிகிச்சை முறைகளை அறியல் அறிந்திருக்கவேண்டியதாதலின் இது குறித்துச் சிறிது ஈண்டு வரைகின்றேன்,

தலைவலியான தூாய்ச்சல், சலதோஷம், மலச்சிக்கல், மூக்குவியாதி முதலியவைகளில் உண்டாகலாம். ஆனால் ஒருத்தலை இடியை ஒரு வியாதி என்றே சொல்லலாம். தலையின் வலது பக்கத்திலாவது, இடது பக்கத்திலாவது, நெற்றியிலாவது அல்லது பிடரிக்கு


வைத்தியர் ம. யோஸ் சின்னத்துரை

மேலாவது இருந்துண்டாகும் தாங்கக்கூடாத குத்தலுக்குத்தான் ஒருத்தலையிடி யென்பது. அச்சமயம் தலை இரண்டு துண்டாய்ப் பிளந்துவிடுமாப்போல் இருக்கும் இத்துடன் வாந்தி வரும். சிலசமயங்களில் வாந்தி எடுத்தால் இடி நின்றுபோகக்கூடும்" இதைப் பித்தஇடி என்று சொல்லுவதுமுண்டு.

## காரணங்களும் குணமும்

காரணங்கள்: (1) கபாலநீர் சம்பந்தமான கண்ரோகங்களும், அதிக கவலையும், இரத்தப்பிய கனவும், சரீர இளைப்புத் தளர்ச்சியும் பிரதான காரணங்களாம். (2) கண்பார்வையில் கோளாறு.

குணங்கள்: வைத்திய சித்தாமணி ஆசிரியர் ஒருத்தலையிடியின் குணங்கூறுகின்றார்:

பகரான வொருதலையை
பாதிநொந்து
பழிகொண்டு
மௌலிதனைப்
பிளந்தாற்போல
நிகரான கண்ணுநீர்
பாய்ந்துகாந்தி
பெருமூச்சு விட்டுமே
நினைந்து இன்பம்
திகரான சடந்தானுந்
திருக்குண்டாகிச்
சிணுக்கிடுமாசியே
பசிகாணுந்
வகரான வாதமா
மயிர்க்கூச்சகும்
வாராத பேதத்தோர்
தலைவலியுமாமே'

இது சிரசின் ஒருபக்கத்திலுள்ள நரம்புகளில் வியாபித்துச் செவிகள் இரண்டையும் பிளந்தாற்போல் நோய் உண்டாகும். அப்பொழுது கண்ணீர் ததும்பல், பெருமூச்சு, திடுக்கிடல், சிணுக்கிருதல், பசியின்மை, ரோமச்சிலிர்ப்பு, முதலியவற்றை யுண்டாக்கும்.

மூளையின் மேற்பாகத்திலிருக்கும் பிற்றுயிற்றறி கோளம் வீங்கியிருந்தாலும் ஒருத்தலையிடி உண்டாகக்கூடும்.

ஒருத்தலைவலி எந்தச் சமயத்திலும் உண்டாகக்கூடும். ஆனால் சாதாரணமாய் விடியற்காலம் நித்திரையிலிருந்து எழுந்தபின் தொடங்கும். ஆரம்பத்தில் கண்பார்வைக்கும் பிரகாசமான அல்லது இருண்ட உருவங்கள் தோன்றக்கூடும். இவ்விதம் சற்று இருந்தபின் தலைவலி ஆரம்பிக்கும். வலி தாங்கக்கூடாததாயிருக்கும். தலையைத் தொட்டால் சாயம்பட்ட புண்போல் வலிக்கும். சரீரம் குளிர்ச்சியாயிருக்கும்.

(iv) இத்தவலி மூன்று நாலு மணிநேரம் அல்லது இரண்டு மூன்று நாள்வரையிலும் வேதனைப்படுத்தும் நாடியிலாவது இரத்த அமுக்குதலிலாவது அதிக மாற்றம் காணமுடியாது. சிலருக்குப் பேசுவதற்குக்கூட முடியாமல் நாக்குத் தடித்துப்போவதுமுண்டு.

## சிகிச்சைமுறை

■ ஒருத்தலை இடி கண்டவர் கண்களை முதலில் சோதிப்பித்தல் மிகவும் முக்கிய கருமம். கண்கோளாறுகளால் தலைவலி ஆரம்பித்தால் ஏற்ற கண்ணாடி போடுவதின் வலி நின்றுபோகும்.

■ நெடுநாட்பட்ட ஒருத்தலை இடிக்கு நல்லெண்ணெய் ஒரு கோழிமுட்டை அளவெடுத்துப் பழங்கஞ்சியில் கலக்கிக் காலை வெறும்வயிற்றில் 3 நாள் குடித்துவரின் தலையிடி சாந்தியாகும்.

■ எலிமிச்சங்காயில் பல துளைகள்செய்து மெல்லிய துணியில் பொட்டணமாய்க் கட்டிப் பசுச்சாணி அப்பித் தீமூட்டி சாணி கருகச்சுட்டு உடனே சாணி நீக்கி மெல்லிய சூட்டுடன் பொட்டணத்தைக் கசக்கி வலியுள்ள இடத்தில் ஒத்தணங் கொடுக்க வலி நிவிர்த்தியாகும்.

■ ஒரு பிடி அறுகம்புல்லில் பாதியெடுத்து அத்துடன் ஒரு பாக்களவு ஓமம் வைத்து அரைத்து நெற்றியில் பூச வலி நிற்கும்.

■ ஒரு கடதாசியில் முன்விரலளவு சீனக்காரத்தூள் அதேஅளவான ஓமம் இரண்டையும் வைத்துச் சுருட்டுப்போல் சுருட்டி முட்டி அப்புகையை வலிபக்கிற நாசியால் உறிஞ்ச வலி நிற்கும்.

■ கஸ்தூரி மாத்திரை ஜீவ மாத்திரை இவற்றிலொன்றைத் தினம் இருபோது கொடுத்துவரின் குணங்கொடுக்கும்.

■ இந்தரோகம் கண்டத்துக்கு மேற்பட்டதாதலால் உள் மருந்துகளை விட விநாணங்களிலும் நிவிர்த்தி செய்வதே நல்லமுறையாகும். ஆகையால் சமயோசிதமாக இஞ்சி முலைப்பால் தைலம், அரக்கு சந்தனாதித் தைலம். பிக்ராமணலித் தைலம், பூநாகத் தைலம் முதலியவற்றிலொன்றை ரோகத்தின் வன்மை மென்மைக்கேற்றவாறு தேர்ந்தெடுத்து விநாணம் செய்விக்க ரோகங்குணமாகும்.

■ இன்றும் நோயுள்ள இடங்களில் ஒத்தடம் மேல்பூச்சு, புகை, ஆக்கிராணம் முதலியவற்றை உபயோகித்தல் அதிக நன்மை தரும்.

■ ஒருத்தலைவலிக்குக் கையாடிசிப்பற்று: பொன்முசுட்டை, வேப்பம்பூடோர்சுக்கு. ஆமணக்கம்வேர், முருங்கை வேப்பட்டை, தக்கை விதை, கோஷ்டம் இவைகளைச் சம எடையாக எடுத்து வெள்ளைப்பூடு சேர்த்தரைத்துப் பற்றுப் போட்டால் வலி நிற்கும்.

■ அடியிற் குறிப்பிட்டிருக்கும் தைலம் மிகவும் பிரயோசனமாயிருக்கும். நல்லெண்ணெய் ஒரு படி, மகஞ்சிச்சாறு, ஆறன்டைச்சாறு, அலரிவேர்த்தண்ணீர் வகைக்குப் படி 1/4 ஒன்றாய்க் கலந்து அதில் குறுந்தொட்டி, முனிசன்னை வேலி கீழ்காய்நெல்லி இலை கள்ளி வேர் கோஷ்டம் தேவதாரம் விளைகுக்கு வகைக்கு கழஞ்சு ஒன்று அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தீரும்.

ஐல்போட்ட பார்லி கஞ்சி மோர் பசுப்பால் மரக்கறிச்சூப்பு முதலியவற்றைச்சாப்பிடவேண்டும். நல்ல காரமான கோப்பியும் நல்லது. விசாலமான வீட்டில் அதிக வெளிச்சமாவது அதிக வெளிச்சமாவது உள்ள அறையில் வைக்காமல் இருட்டறையில் வைத்திருந்தால் இதுவே கூச்சத்தையும் தலையிடியையும் குறைக்க ஏதுவாகும்.

---

35




ஒரு யுகமாகக் கனத்த ஒரு நாள் என்னைவிட்டுக் கழிந்து விட்டது!

எல்லோரும் உள்ளே போனார்கள். கைகளைக்கழுவிவிட்டு நானும் உட்சென்றேன். பெரியையா சட்டையைக் கழற்றி விட்டுக் குளிப்பதற்கு ஆயத்தமாகிறார்;

திடீரென்று ஓர் அலறல். மேல்மாடியிலிருந்து கேட்கிறது. பெரியம்மா!

நாங்கள் மேலே ஓடுகிறோம்.

அவள் தன் அலமாரியின் முன்னால் பேயறைந்தவளாய் நின்று கொண்டிருக்கிறாள்.

எங்களைக் கண்டதும் அவள் ஓலமிட்டு அலமாரியைக் காட்டுகிறாள்.

அங்கே நான் நேற்றுத் திறந்து விட்ட 'லாச்சி' திறந்த நிலையில் கிடக்கிறது.

பெரியையா லாச்சியைப் பார்க்க முன்னே போகிறார்.

"ஓ. அதிலே தொடாதேங்கோ பொலிசு வரவரைக்கும் ஒருவரும் தொடப்படாது"

பெரியையா திரும்புகிறார். "என்ன சங்கதி?"

என் மனமும் அதைத்தான் கேட்டது.

"ஓ. என்ரை வைரம் முத்தெல்லாம் போச்சு. முப்பதாயிரத்துக்கு மேலே"

"ஓ!"

இதிலிருந்து, கதையை வளர்த்த நான் விரும்பவில்லை.

பொலிஸ் வந்தது.

எல்லோரும் வாக்குமூலம் கொடுத்தோம். விரலடையாள நிபுணர்கள் வந்து படம் எடுத்தார்கள். வீட்டிலிருந்தவர்களின் விரலடையாளங்களையும் எடுத்தார்கள்.

அடுத்த நாள் நான் கைது செய்யப்படுகிறேன். 'ரிமாண்ட்'டில் ஒரு மாதம் விளக்க முடிவில், நீதிபதி தீர்ப்பை வழங்கினார் "......சோமசுந்தரம் என்ற சோமுவுக்கு ஐந்து வருடச் சிறைவாசம்."

நான் கூண்டிலிருந்திறங்கி இரண்டு காவலர் புடைசூழ, தலையைக் குனிந்தபடி செல்கிறேன்.

டாக்குத்தருக்குத் தாரை வார்ப்பதற்காய், தான் மூன்றரேசிற்றுக் கட்டு அழித்து விட்டதையும், இனிமேல் தாரைவார்க்க ஒரு சேமிப்பு ஏற்படுத்திவிட்டதை மழிவாக, அருந்ததி அம்மையார் அமைத்துவிட்ட பொறியில் நான் விழுந்துவிட்டதை இந்த உலகம் ஒப்புக் கொள்ளுமா?

அவன் புத்தகத்தை மூடிவிட்டு, தன்கதையில் ஒன்றிப்போய், மரத்தோடு மரமாக் கிடக்கிறான் அவன் இதுவரையாண்டுகளாய் சிறைக்குள்ளிருந்து சிறைப்பிடித்துவிட முயன்ற பழிக்குப் பழி வாங்குமுணர்ச்சி, மறுபடியுந்தன்னுள்ளே தலை தூக்குவதை உணர்கிறான்.

இதை நான் வாசித்திருக்கக் கூடாதோ?

அவனைச்சிந்திக்கவே விடாமல் ஏதோ உணர்ச்சிகள் அவனுள் புரண்டு புரண்டு தீயாக மாறுவதை அவனே காணுகின்றான்,

'சுயநலம் நசித்துப் போகாமலிருந்தால் தானே சேவைதானமோ, பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியோ தலைதூக்கும்? இந்த உணர்ச்சிகள் தலைதூக்கி நிற்கிற போது, பிரச்சினைகளைக் கண்டு செத்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு எப்படிச் சேவை செய்யமுடியும்? தன்னலம் செத்த பிறகுதான் சேவை செய்கிற தகுதி-பக்குவம் எவருக்கும் வரும் இந்த நிதிக்கு நானும் விலக்கல்ல'

குடிசையினுள்ளே போய், சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டே, அவன் வெளியேறி நடக்கிறான்.

அந்தப்பக்குவத்தை தேடி அவன் ஆரம்பித்து விட்ட பிரயாணத்தை இனி எவராலுமே நிறுத்த முடியாது.

வழியிலிருந்த வேப்பமரத்தைக் கடக்கிறபோது, 'இன்னும் இரண்டொரு வருடத்தில் மீண்டும் வருவேன்' என்ற எண்ணம் அவனுள் துளிர்க்கிறது.

"இந்த உலகத்தில் நான் ஒரு பிரயாணி என் இந்தப் பிரயாணத்தில் என்னோடு சம்பந்தப் பட்டவர்கள் எல்லாம் அம்மா - ஆனந்தன் முதல், லைலாவரை, தங்கள் தங்கள் இடங்களில் இறங்கி விட்டார்கள்.

இவர்களை யெல்லாம் இதே உருவத்தில் அல்லது வேறு உருவத்தில் எங்கேயோ மீண்டும் மீண்டும் சந்திக்கப் போகிறேன்.

"ஓம், இன்னும் ரெண்டொரு வருஷத்தில் சந்திக்கிறதுக்குரிய பக்குவத்தைத் தேடிக்கொண்டு மீண்டும் வருகிறேன்"

(முற்றும்)

### ஒரு மிருகம்

மனிதன் பேராசையும் கோபமும் உருவான ஒரு மிருகம். சமுதாயக் கட்டுப்பாடு ஒன்றுதான் அவனுக்கு நற்பண்புகளை அளிக்கமுடியும்.

— அரிஸ்டாடில்

## யாழ். இந்துக் கல்லூரி

# கல்வியும் சமயமும் தழைத்தோங்குகிறது!

தேமதுரத் தமிழோசை எங்காதினிலே அமுதமெனப் பொழிகிறது. பண்ணோடு இசைபாடுவோர் ஒருபுறம், படம்வரைந்து பழகுவோர் ஒருபுறம், எமது மொழிமாத்திரமல்ல எம்மொழியிலும் வல்லவர் எனப் பெயர் எடுப்போம் என்று அண்டைமொழி ஆங்கிலத்தை அமைதியுடன் படிப்போர் ஒருபுறம், பழையன கழிந்து புதியன புகுவோம் என்றும், பரிசோதனைகள்மூலம் புதிய பலசாதனைகள் செய்வோம் என்று ஆய்வுகள் நடாத்தும் கூட்டம் ஒருபுறம். இவையெல்லாம் எங்கே உண்டு என்று கேட்கிறீர்களா? எங்கள் யாழ். இந்துக்கல்லூரியில் தான் இத்தகைய காட்சிகளையும் எந்நேரமும் காணலாம்.

### எங்கள் பாடசாலை — 1

**கல்லூரி அமைப்பு**

இளமைத் துடிப்புடைய இளைஞர்கள் என் கண்முன்னர் தெரிகின்றனர். புதுமைப்பொலிவுடன் தெரிகிறது குமாரசுவாமி மண்டபம். மருங்கில் பழைய அதிபர் சபாரத்தினத்தின் புகைப்படம். உள்ளே நுழைந்ததும் அதிபர் அறை தெரிகிறது. அங்கு கையில் பேனாவுடன் அவசரம் அவசரமாகப் புத்தகத்தைப் புரட்டுவதும் எழுதுவதுமாக இருக்கிறார் அதிபர். அங்கு மூலையில் சாத்தப்பட்டிருக்கிறது பிரம்பு.

**தொண்டு**

இந்துக்கல்லூரியின் இத்தோற்றம் அழகு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அனைத்தும் நன்கு கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை நிச்சயமாக உணர்த்தும். எமது கல்லூரி இந்து வரலாற்றில் ஏன் தமிழின வரலாற்றில் ஒளிவிளக்கு என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆண்டாண்டு தமிழினத்துக்கு மாத்திரமல்ல இந்த நாட்டுக்கே பொறியியல் வல்லுனர்களையும், டாக்டர்களையும் மற்றும் பல வேறு தொழிற்றுறையினரையும் ஆக்கி அளித்துவருகிறது. இந்த அளப்பரிய தொண்டுக்குக் காரணமானவர்கள் கல்லூரி அதிபரும் மற்றும் ஆசிரியர்களும்தான்.

அவர்களின் முயற்சியினால் மாணவர் உலகம் ஆக்கப் பாதையில் ஊக்குவிக்கப் பட்டுவருகிறது. இந்தக்கல்லூரி தனது கடந்தகால வரலாற்றிலே எத்தனையோ அதிபர்களையும் ஆசிரியர்களையும் கண்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் எமது மாணவர்கள் கடமைப்பட்டவர்களாவர்.

இன்று எமதுகல்லூரி திரு. எஸ். சபாலிங்கத்தை அதிபராகக்கொண்டும், 52 ஆசிரியர்களைக்கொண்டும் சிறப்பாக இயங்கிவருகிறது. அதிபரின் திறமை, கண்டிப்பு அனைவருக்கும் தெரிந்திருக்கும். அவரை விளையாட்டு மைதானத்தில் பார்த்திருந்தால் தெரியும் விளையாட்டுத்துறையில் அவருக்கிருக்கும் ஆர்வத்தை. கேட்டிருந்தால் தெரியும் அவரது பேச்சுவன்மை; பழகியிருந்தால் தெரியும் அவரது இனிய சுபாவத்தை. தற்போது எமது கல்லூரி அவரது முயற்சியினால் பலதுறைகளில் முன்னேறி வருகிறது.

**ஆசிரியர்கள்**

இனி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் பார்க்கலவர். யார் நல்லவர் என்று தரம்பிரிக்க முடியாதநிலை. ஒருவருக்கு ஒருவர் சளைக்காதவர்களல்ல. நாவலர்விழாக் கண்ட 'சொக்கன்' ஒருபுறம், நாடக ஆசிரியரும் பாடசாலை ஆசிரியருமான 'யாழ்-தேவன்' ஒருபுறம், இலக்கியப் பேச்சாளர் சிவராமலிங்கம் ஒருபுறம், விஞ்ஞான எழுத்தாளர் கருணாகரர் ஒருபுறம், விஷயங்களை விளக்கம்தரும் பிரான்சிஸ் ஒருபுறம். இப்படியாக எல்லா ஆசிரியர்களும், எல்லோருக்கும் அறிமுகமானவர்களே அவர்களது திறமையும் வெளிப்படையானதே. இப்படியான திறமைமிகுந்தவர்களைக் கொண்ட எமதுகல்லூரி எமக்கு ஒரு வரப்பிரசாதமே.

**மாணவர்கள்**

ஆசிரியர்களோடு ஒத்துழைக்கக்கூடிய திறமைமிகுந்த மாணவர்களையும்கொண்டது எமதுகல்லூரி. தொடர்ந்து எமது கல்லூரி அதனை கடந்த ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் உயர்தரம் எடுக்கக்கூடிய சித்தியுடன் நூற்றுக்கணக்கான மாணவர்களும், பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் துறைக்கு பல மாணவர்களையும், வைத்தியத்துறைக்கு சில மாணவர்களையும் மற்றும் கலைதுறைக்கு பலரையும் புகவைத்த பெருமை எமது கல்லூரியைத்தான் சாரும். நாட்டில் எத்திக்கிலும் நடைபெறும் பரீட்சைகளிலும் போட்டிகளிலும் நிச்சயமாக எமது கல்லூரி பரிசில்பெற்றிருக்கிறது.

**சமயத்துறை**

கல்வித்துறையில் மாத்திரமல்ல சமயத்துறைக்கும் எமது கல்லூரி இந்துமன்றம் ஆற்றிவரும் தொண்டுகள் பல. சமயப்பெரியார்களின்விழாவானாலும், சமய விழாக்களென்றாலும் அனைத்துமே சிறப்பாக நடாத்தப்படும். அந்தப்பெரியார்களை வரவழைத்து மாணவர்களுக்குப் பயன்தரும் பேச்சுக்களை நிகழ்த்தி இளம் மாணவர்களிடையே சமயப் பற்றை வளர்க்க பெரிதும் உதவி வருகிறது.

**பொதுத்துறை**

உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தினரின் தொண்டுகள்பல. பிறநாட்டுப் பெரியார்கள் எமது நாட்டுக்கு வருகைதந்தால் அவர்களை எமது கல்லூரிக்கு வரவழைத்து பேச்சுக்களை நிகழ்த்துவதால் அன்னைய நாட்டு கலை, பண்பு, கலாசாரத்தை அறியவைக்கிறது. சமீபத்தில் இராப்போசன விருந்தை மிகவும் சிறப்பாகக் கொண்டாடிய போது பிரதம விருந்தினர். 'நாட்டின் எப்பகுதியிலும் சிறந்த உத்தியோகம் வகிப்பவர்களும், மற்றும் சில துறையில் சிறப்படைந்து இருப்பவர்கள் நிச்சயமாக இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களாகத்தான் இருக்கிறார்கள்' என்றார். இதுவே எமது கல்லூரியின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**பல்கலைக்கழகத் தெரிவு**

மேலும் பல்கலைக்கழகத் தெரிவு விகிதாசாரமென்ருல் என்ன, திறமை அடிப்படை என்ருல் என்ன, தொகுதி அடிப்படைதான் என்ருல் என்ன முதன்தர மாணவர்களாக இருப்பது எங்கள் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் என்பதைப் பெருமையோடு கூற விரும்புகிறேன்.

எனவே கடந்த காலங்களிலும் இனியும் தமிழின மாணவ வரலாற்றில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் எமது கல்லூரி மேன்மேலும் சுடர்விட அனைவரும் வாழ்த்துவோமாக.

**செல்வன். வி. க. அருளானந்தம்**



ஆசிரியர்:- உங்களோடு கத்திக்கத்தி எனக்கு இருதயத்தில் ஓட்டையே விழுந்துவிட்டது.

மாணவன்:- உங்களுக்கும் இருதயம் இருக்கிறதா சேர்.

ஆசிரியர்:- ?......? ......?...

### கேள்விக் கொத்து!

அவர் ஒரு தமிழ் ஆசிரியர். பஸ் நிலையத்தில் பாடசாலை அதிபர் ஒருவரைச் சந்தித்தார். பேச்சு ஆரம்பமானது. 'உங்கள் பாடசாலையில் யாரும் கேள்விக் கொத்துக்குப் பதில் அனுப்பவில்லையா?'- இது தமிழ் ஆசிரியரின் கேள்வி.

**மினிகதை**

ஒருவரும் அனுப்பவில்லையென அதிபர் கூறுகிறார். 'நீங்கள் எந்தச் சங்கத்தில் இருக்கிறீர்கள்?' தமிழ் ஆசிரியர் கேட்கிறார். 'எதிலும் இல்லை' என்பது அதிபரின் பதில். 'அப்படியானால் ... ...' என்று தமிழ் ஆசிரியர் இழுத்தபோது, 'எனது பாடசாலையில் ஜே. எஸ். சி. மட்டும் தான்' என்கிறார் அதிபர். அத்துடன் தமிழ்ஆசிரியர் வாய்திறக்கவில்லை.

— யோகி

அன்பான தம்பி தங்கைகளே!

நீங்கள் கல்வி கற்றுவரும் பாடசாலையையோ, கல்லூரியைப் பற்றியோ எழுதி அனுப்புங்கள், பிரசுரிக்கிறோம். உங்கள் கட்டுரை 'புல்ஸ்காப்' பேப்பரில் 3 பக்கங்களுக்கு மேற்படக்கூடாது. 'புல்ஸ்காப்' பேப்பரில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படவேண்டும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

அன்பான,

விமலா அக்கா.




# பிள்ளைகளின் பெற்றோரே ஊக்குவித்தல் வேண்டும்!

யாழ் சிறுவர் நூல் நிலையம் — 3

செல்வி விமலாசனி அம்பிகைபாகர்

**யாழ்ப்பாணத்தில் 1933-ல் ஆரம்பம்**

ஒரு பொதுசன நூல் நிலையத்தின் பல்வேறுபட்ட சேவைகளில் சிறுவர் நூல் நிலையமும் ஓர் அம்சமாகின்றது. யாழ்ப்பாணத்தில் நூல்நிலைய வளர்ச்சி 1933ம் ஆண்டில் திருவாளர் க. மு. செல்லப்பா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக நூல்நிலையம் வளர்ச்சி அடைந்து தனக்கென ஒரு சொந்தக் கட்டிடத்தையும் அமைத்துக் கொண்டதோடு, யாழ்ப்பாண மக்களின் தேவைகளைக் கடந்த 30 ஆண்டுகள்வரை தன்னால் இயன்றளவுக்குப் பூர்த்தி செய்த பின்னர்தான், சிறுவர் நூல் நிலையம் என்னும் அம்சத்தைப்பற்றிச்சிந்திக்கக்கூடிய வல்லமை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம்மாநகரசபை முன்னாள் உதவி முதல்வர் திரு. என்.டி. செல்வத்துரை அவர்களது தலைமையில் 20-5-1961 அன்று கூடிய நூல் நிலையக் குழுவின் கூட்டத்தில் யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்தை மேலும் புனருத்தாரணஞ் செய்வதற்கென ஒரு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த விசேட குழு சமர்ப்பித்த அறிக்கையில் சிறுவர் நூல் நிலையம் அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டியது. "சிறுவர் நூல் நிலையம் ஒன்று இருத்தல் அவசியம் என "போனி" (Bonny) அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நாமும் ஒப்புக் கொள்ளுவதாற் திட்டத்திற் சேர்க்கப்படாத சிறுவர் நூல் நிலையத்தை நாம் சேர்த்துள்ளோம் என்று கூறப்பட்டது.

**அமைந்திருக்கும் இடம்**

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்தின் கீழ்த்தரையில் வடபாகத்தில் அகலமான பெரியதொரு மண்டபம் உளது. இம்மண்டபம் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் முற்பகுதி சஞ்சிகைகள் உள்ள வாசிப்பு வாசிகசாலையாக உள்ளது. அதையடுத்து மேலும் வடக்குப் பக்கமாக உள்ள பகுதிதான் சிறுவர் நூல் நிலையம். இச்சிறுவர் நூல் நிலையத்தினைச் சென்றடைவதற்குப் பிரத்தியேகமான வழி ஒன்று உண்டு. பொதுசன நூல் நிலையத்தின் பிரதான வாசலுக்கு வந்ததும் நூல் நிலையக் கட்டிடத்தின் உள்ளே பிரவேசிக்காமல் வலப்பக்கத்து வீதி வழியாகக் கட்டிடத்தின் ஓரமாக வந்து கட்டிடத்தின் முடிவிற் திரும்பியதும் சிறுவர் நூல் நிலையந்தென்படும்.'

(வளரும்)

### டிக்-டிக் மான்கள்

கிழக்கு ஆபிரிக்காவில் டிக் - டிக் என்று அழைக்கப்படும் மிகச்சிறிய மானினவகை காணப்படுகிறது. உயரமான டிக்-டிக்குகள் சுமார் பதினான்கு முதல் பதினைந்து அங்குல உயரமுடையனவாகவிருக்கின்றன. அவை மிக நுண்மையானவை. மேலும் சிறிய குளம்புகளையும் குட்டையான வால்களையும் கொண்டிருக்கின்றன.

### பட்டிப் பூ

—மேலைப்புலோலி. மு. சு. கதிர்காமத்தம்பி—

பட்டிப் பூவைப் பாருங்கள்
பரந்து எங்கும் கிடக்குது
கொட்டி விட்டாற் போல நிறையக்
குவிந்து பூத்துக் குலுங்குது
—பட்டிப் பூ.

தட்டுப் போல இதழ் கண்பரப்பி
சாய்ந்து நிமிர்ந்து காட்டுது
தொட்டுச் செல்லும் காற்றே "நானும்
சொகுசா" என்று கேட்குது
—பட்டிப் பூ

மட்டில் லாத ஆசை கொண்டு
மனத்தை மயக்கப் பார்க்குது
எட்டிப் பார்ப்பார் எவருமில்லை
ஏங்கி ஏங்கிச் சாகுது
பட்டிப் பூ.

# சுவையான ஐஸ்கிரீமின் கஷ்டமான வரலாறு!

ஐஸ்கிரீம்! பாலர் தொடங்கிப் பாட்டாவரை மறுக்காது ஆவலோடு வாங்கிச் சுவைக்கும் ஒரு உணவு. இதை முதலில் கண்டுபிடித்தவர் யார்? எப்படிவந்தது? இத்தகவல்கள் உங்கள் யாருக்கும் தெரியுமா? இதற்கு ஒரு சுவையான கதையிருக்கிறது.

## முதலில் கண்டுபிடித்தவர்

ஸெட்டீ ஜான்ஸன் என்ற அமெரிக்க மாதே இதைமுதலில் கண்டுபிடித்தவர் இதை இவர் வேண்டுமென்று தயாரிக்கவில்லை. ஏதோ தவறுதலினால் ஐஸ்கிரீம் தயாராயிற்று. அதற்காக அவள் குற்றவாளியாகி சிறைப்பட்டாள். கேட்க உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதில்லையா? ஆம், இது 160ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் நடந்த உண்மை நிகழ்ச்சி.

அப்போது ஜேம்ஸ் மேடிசன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். இந்தக் காலத்தைப் போலவே அப்போதும் ஜனாதிபதி விருந்து கொடுப்பது வழக்கம். ஒரு நாள் வெள்ளை மாளிகையில் பெரிய விருந்து ஒன்றுக்குஏற்பாடாகியது ஜனாதிபதி மனைவி டாலி மேடிசனின் மேற்பார்வையில் ஏற்பாடுகள் கட்டுபடலாக நடந்துகொண்டிருந்தன.

ஆனால் என்ன காரணத்தினாலோ விருந்து தடைப்பட்டது. எல்லோருக்கும் ஏமாற்றம்.

## வெள்ளை மாளிகையில்

வெள்ளை மாளிகையின் சமையல் செய்பவள் ஒரு நீக்ரோ. அவள் பெயர் ஸெட்டீ ஜான்ஸன். தயாரித்த பண்டங்கள் யாவும் கெடாதிருக்க அவற்றைஐஸ் பெட்டியில் அவள் வைத்திருந்தாள். இது வேறு யாருக்கும் தெரியாது. ஜான்ஸனே சில நாட்களில் அதைமறந்துவிட்டாள்.

ஆனால் சில நாட்களுக்குள்ளேயே திரும்பவும் விருந்துக்கு ஏற்பாடாயிற்று. பெட்டிகளில் இருந்த உணவுப்பண்டங்கள் பற்றிய நினைவுவரவே அவள் அதை நாடினாள் இறுகிஇருந்தன.

அப்படி இறுகியவற்றை எப்படிப் பரிமாறுவது எனச் சற்றுத்தயங்கினாலும் கடைசியில் அவற்றையே உபயோகித்தாள் விருந்தாளிகளுக்கு இவை புதுமையாகத்தோன்றவே தயங்கினர். ஒருவர் மட்டும் ஒருதின்பண்டத்தை வாயில் வைத்துப் பார்த்து அது குளிரவே பயந்துபோய் உமிழ்ந்துவிட்டு கவனிக்காமல் "விஷம், விஷம்" என அலறினார்.

## சிறைப்பட்டாள்

அப்புறம் கேட்க வேண்டுமா? கூட்டத்தில் ஒரே குழப்பம். ஸெட்டி அருகேயே நின்று இவற்றை



யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள். அடுத்த கணமே ஸெட்டியை சிறையில் அடைத்தனர். வந்தவர்கள் விருந்துண்ணவில்லை. விருந்துநிகழ்ச்சி துன்பத்தில் முடிந்ததையிட்டு டாலி மேடிசன் வருந்தினாள். விஷம் எப்படி வந்தது என அவளுக்குப் புரியவில்லை. உண்மையை ஆராயநினைத்தாள்

"தின்பண்டங்களை நாமே தின்றுபார்த்தால் தெரியுமில்லையா" என நினைத்தாள். உடனே ஒவ்வொன்றையும் வாயில் போட்டுப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்!

அவற்றின் இனிப்பை அளவிடவே முடியவில்லை. இது போன்ற ஒரு பொழுதும் அவள் சுவைத்ததில்லை. ஆர அமரத்தின்று பார்த்தாள். ருசி அதிகரித்தது. இந்தப் புதிய ருசிக்கும் உறைந்த தின்பண்டங்களுக்கும் பழக்கப்படாத விருந்தாளிகள் பயந்துவிட்டனர் என்பதை டாலிமெடிசன் உணர்ந்தாள்.

முதல்வேலையாக ஸெட்டி ஜான்ஸனைச் சிறைமீட்டாள். சிறையிலிருந்து திரும்பிய அவளுக்கு தான்செய்ததவறு என்னவென விளங்கவில்லை. உண்மையில் அவள் ஏதாவது குற்றம் செய்திருந்தால் அவளுக்குத் தெரியாதா? இப்படித்தன்னை அறியாமலேயே ஸெட்டி "ஐஸ்கிரீமை"க் கண்டுபிடித்தாள்! அதுமுதல் ஓராண்டுக்குள்ளாக அமெரிக்காவெங்கும் ஐஸ்கிரீம் பரவிவிட்டது அங்கிருந்து தான் உலகெங்கும்பரவியது.

## உணவு விதிகள்

★ உணவு, உண்பதற்காக மட்டுமில்லை, உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது என்பதை நினைவுகொள்ளுங்கள்.

★ பெரும்பாலான மக்களின் மரணம் அதிகம் உண்பதால்தான் நேர்கிறது. கொஞ்சம் உண்பதாற்று அல்ல.

★ உடல் நலத்துக்கும் உடல் நிலைக்கும் ஏற்ற உணவுப்பொருள்களை உணர்ந்து சேர்த்துக்கொள்ளுங்கள்.

★ நன்றாக ஆறுதலாக அவசரமின்றி மென்றுசுவைத்துச்சாப்பிடுங்கள் இயற்கை இதற்காகத்தான் பல்லையும் நாவையும் நமக்கு கொடுத்திருக்கிறது.

★ வயிறுமுட்டச் சாப்பிட்டால்,மூளை மந்தமாகிவிடும். மூளை உழைப்பாளிகள் குறைவாகவே உண்ணவேண்டும்.

★ போதைப் பொருட்களை நாடாதீர்கள். களைத்திருக்கும் குதிரையைச் சவுக்கால் அடித்துக்கிளர்த்துவது போன்றது போதை வஸ்துப் பொருள்களைப் பயன்படுத்துவது.

★ சாப்பிடலாமா, வேண்டாமா எனும் தயக்கம் ஏற்படும் போது சாப்பிடாமல் இருப்பதுதான் நல்லது.

★ களைப்பாக இருக்கும்போது அல்லது கடுமையான உடல்உழைப்புக்குப்பின்னர் உடனே சாப்பிடாதீர்கள். சிறிதுநேரம் ஓய்வெடுத்தபின் சாப்பிடுங்கள்.

★ சத்துள்ள உணவுப் பண்டங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். அமைதியாக, ஆர்வத்துடன் சாப்பிடுங்கள். மகிழ்ச்சியுடன் நிதானமாகச் சாப்பிடுவது மிகவும் நன்று.

—ஷ்பால் ஜைன்.

# அலங்காரம் அவசியமா?

பெண்களுக்கு அலங்காரம் என்பது தேவை தான். ஆனால் அது அளவோடு இருக்க வேண்டும். காலத்திற்கு ஏற்ப இடத்திற்கு ஏற்ப அலங்காரம் செய்து கொள்வதின்மூலம் அழகுக்கு அழகூட்ட முடியும்.



உடலைச் சுற்றிக்கொண்டிருந்தால் போதும் என்று உடை அணிவதோ, ஏதோ வாயில் வார்த்தைகள் வந்தது பேசினேன் என்பதோ மனிதர் வாழ்க்கையில் இருக்கக்கூடாது.

இடம் அறிந்து பேசுதல் இடத்திற்கேற்ற உடை யணிதல் வாழ்வில் ஒவ்வொரு பெண்ணும் கற்றுக்கொள்ள வேண்டியவையாகும்.

எப்போதும் எளிமையாகவும், தூய்மையாகவும் விளங்கவேண்டும்,

### அளவுக்கு அதிகமானால்

அழகு என்பது சிலருக்கு இயற்கையிலேயே கிடைத்த வரப்பிரசாதம். அது இல்லாதவர்கள் செயற்கை மூலம் அதைப்பெற விரும்புகிறார்கள். அப்படி அவர்கள் நினைப்பதிலும் தவறு இல்லை. அளவோடு அலங்காரம் செய்துகொண்டும் போது அழகு பெற முடியும். அளவுக்கு அதிகமானால் அழகு அங்கே அசிங்கமாகிவிடும்

முகத்தையே விழுங்கும் அளவுக்குப் பொட்டுவைப்பதோ நகை அணிவதோ கூடாது. எவ்வளவுக்கெவ்வளவு இனிமையாகப் பெண்கள் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அழகாகத் தோன்றுவார்கள்.

### நடமாடும் நகைக் கடை

பெண்கள் என்றாலே நகைப்பிரியர்கள் என்றுதான் பொருள். பெண்ணுக்கும் நகைக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்புண்டு. மன நிறைவுக்காகவும் அழகுக்காகவும் பெண்கள் நகை அணிந்துகொள்ளலாம். ஆனால் அளவுக்கு அதிகமாக நகைகளை அள்ளிப் போட்டுக்கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் நடமாடும் நகைக்கடை வருகிறது என்று மற்றவர்கள் ஏளனம் செய்ய அது இடம் அளிக்கும்.

அலங்காரம் செய்யும் போது கவனிக்கவேண்டிய முக்கியமான ஒன்று அவரவர் நிறத்திற்கு ஏற்ப உடைகளையும் நகைகளையும் தேர்ந்தெடுத்து அலங்காரம் செய்துகொள்வதாகும்.

### காலம் இடம்

கோடையில் நல்ல பருத்திப் புடைவைகளை அணிய வேண்டும். கடும் வெய்யிலில் கடும் கலர்களிலும் பார்க்க மெல்லிய நிறங்களே நல்லது. மாலையில் விழாக்களுக்கு "பார்ட்டி"களுக்குச் செல்லும்போது கடும் நிறங்களையும் நகைகளையும் அணியலாம்

மாரிகாலத்தில் டெரிலின் சில்க் புடைவைகள் நல்லது கடுங்கலரும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவிருக்கும் திருமணம்போன்ற மங்களகரமான விழாக்களுக்கு கறுப்பு நிறச் சேலைகளை அணிந்து செல்லக்கூடாது

ஆடை அணிகளை வாங்கி அணிவதிலும் திட்டமிட்டுச் செயல்படவேண்டும் திட்டமில்லாத வாழ்க்கை பட்டமரம் என்பார்கள் தமிழ்ப் பெண்களாகிய நமக்கென்று சில கட்டுப்பாடுகள் உண்டு அவற்றை மீறி நடக்கக் கூடாது இன்று நாகரிகப் பித்துப் பிடித்து அலையும் சில பெண்கள் புனிதமான தாலியைக்கூட, காட்சிப் பொருளாக்க அணிகிறார்கள் இது பெண்மைக்கு அழகல்ல

### வீடே கோவில்

ஒவ்வொருவரும் கடவுளைத் தேடிக் கோவிலுக்குப் போகவேண்டும் என்பதில்லை; வீடே ஒரு கோவில்தான் சுத்தமாகவும் அழகாகவும் அதை வைத்துக் கொண்டால் அதுவே கடவுள் குடியிருக்கும் கோவில்

### பண்பே அலங்காரம்

அலங்காரத்தைவிட நல்ல குணங்கள்தான் மிகவும் தேவை நல்ல பண்பும் ஒரு அலங்காரம்தான் வெளி அழகிலும் உள் அழகுக்கு எப்பொழுதுமே மதிப்பும் மரியாதையும் அதிகம்



தயாரிப்பு ０ குணம்

## வாரம் ஒரு கேக்

### 'கோல்டின்கேக்'

தேவையான பொருட்கள்:

சீனி — 3 அவுன்ஸ்
பட்டர் — 4 ,,
செரிபழம் — 2 ,,
பேக்கிங் பவுடர் — சிறிதளவு
உப்பு } தேவையான
வனிலா } அளவு
பால் — 1/2 கோப்பை
கோதுமைமா 6 அவு.

### செய்முறை!

சீனியையும் பட்டரையும் நன்றாகச் சேர்த்து அடிக்க வேண்டும். பின் பேக்கிங் பவுடர் சேர்த்து அரித்த மாவைச் சிறிதுசிறிதாக அடித்த கலவையுடன்சேர்த்துக் கொள்ளவும். பின்னர் பாலையும் வனிலாவையும் செரிபழங்களையும் சேர்த்து பட்டர் பூசிய ட்ரேயில் ஊற்றி வேக வைக்கவும்.

## பெண் மனத்தை...

பெண்மனத்தை ஆண்பிள்ளை அவ்வளவு சுலபமாக உணரமுடிந்தால். உலகத்தின் சிக்கல்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது எப்பொழுதுமே ஏற்பட்டிருக்காது.

— ஓர் அறிஞன்

## கர்வம் விளைத்த கேடு

ஒருவர் தம்மைவிட மஹான் யாருமில்லை யெனக்கர்வம் அடைந்திருந்தார் அவரிடம் ஒரு வழிப் போக்கர், "அடே! நாய்க்கும் தாழ்ந்தவனே!" என்றார். உடனே அவர் மிகக் கோபித்துக் கொண்டார். வழிப்போக்கர் சிரித்துக் கொண்டே, "ஸ்வாமி, நீர் திட்டினால் கோபித்துக் கொள்கிறீர். நாய் கோபித்துக் கொள்ளுமா? நாய்க்குஎவ்வளவு பொறுமை! நீங்கள் நாய்க்கும் தாழ்ந்தவரில்லாமல் உயர்ந்தவரா?" என்றார். உடனே அவர்வெட்கி "கோபித்துக்கொள்பவன் நாய்க்கும்தாழ்ந்தவன்" என்றுஅறிந்து கொண்டார். அஹம்பாவத்தை விட்டார்.

## 'பிக்பாக்கட்'

டாக்டர்: கூட்டம் அதிகம் உள்ள இடத்துக்குப் போகாதே. உன் இதயபலவீனத்துக்குக்கூடாது.

நோயாளி: போகாவிட்டால் என் பிழைப்பு நடக்காதே டாக்டர்.

டாக்டர்: உனக்கு என்ன தொழில்?

நோயாளி: "பிக்பாக்கட் அடித்தல்".

## பூனைக்கு தாகம்!


பிள்ளை:- நீநேற்று தாகத்தோடு இருக்கிற வருக்குத் தண்ணீர்வைப்பது புண்ணியம் என்று சொன்னாயே, அம்மா!

அம்மா:- ஆமாம் கண்ணே! சந்தேகம் என்ன?

பிள்ளை: அப்படியானால் பூனை அதிக தாகத்தோடு கத்துகிறது. சட்டியில் இருக்கும் பாலைக் குடிக்கும்படி செய்தேன்.

# தமிழ் மொழி மூலம் போதனையளிக்கும்

# ஒரே ஒரு பல்தொழில் நுட்பக் கல்லூரி



கிராமங்கள் தோறும் தொழில் நுட்பக்கல்லூரிகளை நிறுவி விவசாய தொழில் துறைகளில் இளைஞர்களுக்கு போதனையளித்து அவர்களை வேலை வாய்ப்புடையவர்களாக்கி அதன் மூலம் நாட்டின் பொருளாதார வளத்தையும் அபிவிருத்தி அடையச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ்வேளையில் தமிழ்பேசும் மக்களுக்கு தமிழ்மூலம் போதனையளிக்கும் ஒரேஒரு தொழில் நுட்பக் கல்லூரியாக விளங்கும் வடபகுதியில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரி இவ்வருடம் ஜுன் மாதம் பல்தொழில் நுட்பக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை யாவரும் வரவேற்கத்தக்க தொன்றாகும். 1972-ம் ஆண்டிலிருந்து புதிய சில துறைகளில் போதனையளிக்கப்பட்டு பல்தொழில் நுட்பக் கல்லூரி

## புதிய பல போதனைகளுடன்

## அடுத்தாண்டு தரமுயருகிறது

யாக இது செயல்படவிருக்கிறது.

### 1959-ல் ஆரம்பம்

யாழ்நகரின் எல்லை கோக்குவில் கிராமம் ஆரம்பமாகியுள்ள இடம் இதில்தான் நமது பல்தொழில் நுட்பக் கல்லூரி அமைந்துள்ளது. 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாக கொழும்பு திட்டத்தின் கீழ் நியூசிலாந்து அரசின் உதவியுடன் நிறுவப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலில் இங்கு வர்த்தக போதனை நடைபெற்றது 40 மாணவர்களே இங்கு இப் போதனையைப் பெற்றனர். இதையடுத்து 1961ம் ஆண்டு தொழில்வகுதி, எந்திரவியல், ஆரம்ப எந்திரவியல் கட்டட அமைப்பு தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆகிய துறைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### போதனைகள்

இதையடுத்து எந்திரவியல், வணிகம், தொழில் ஆகிய மூன்று துறைகளும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இன்று எந்திரவியலில் (ஆரம்ப) பட்டம் வரை தொழில் பயிற்சி, நில அளவையும் மட்டம் பார்த்தலும், ஆரம்ப எந்திரவியல், கட்டட அமைப்பு ஆகிய பிரிவுகள் உள்ளன.

வணிகப் போதனையில் கணக்குப் பதிவாளர் வர்த்தகதராதரப்பத்திரம், சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் வர்த்தகதராதரப்பத்திரம், சுருக்கெழுத்தாளர் தராதரப்பத்திரம், ஆகியவற்றிற்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.

இதையடுத்து தொழிற் போதனையில் கட்டடங்களின் மின்சார அமைப்பு வேலை, மோட்டார் எந்திரவியல், தச்சுவேலையும் இணைப்பு வேலையும், பொருத்துதல், தகட்டு உலோக வேலை வாகெஞவிபோனல் [?] மின்கம்பி இணைத்தல் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

குணம்

இப்போதனைகளில் அநேகமானவை காலை, மாலை இரு நேரங்களிலும் சில மாலையிலும் சில காலையில் மட்டும் நடைபெறுகின்றன.

இவ்வருடம் ஜுன் மாதம் பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தைக் கல்வியமைச்சு இத்தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைத்துள்ளது. பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற போதனைகளில் விவசாயம் தவிர்ந்த ஏனையவை இங்கு போதிக்கப்படுகின்றன. விவசாயத்துறை பலாலியிலேயே நடைபெறுகிறது. இதற்கான வசதிகள் அங்கு செய்யப்பட்டுள்ளன. விவசாயப்போதனை இந்தப் பல்கலைத் தொழில் நுட்பக் கல்லூரியின்கீழ் இயங்குகிறது.

1972-ம் ஆண்டு பூரண பல்தொழில் நுட்பக் கல்லூரியாக இயங்கும் பொழுது வணிகவியல் தேர்வு, கணக்கியல் தேர்வு, வானொலி, மின்சார எந்திரவியல், நீர்க்குழாய்த் தொழில் ஆகியன புதிய போதனைத்துறைகளாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

### விவசாயப் பிரிவு

இத்தகைய பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் இலங்கையில் 5 இடங்களில் உள்ளன. இதைவிட ஏனைய நான்கும் தெஹிவளை, கண்டி, காலி, குளியாப்பிட்டியா ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. குளியாப்பிட்டியிலுள்ள பல்தொழில் நுட்பக் கல்லூரியில் விவசாயம் போதிக்கப்படுகிறது. விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு நவீன முறைகள் அவை சம்பந்தமான பயிற்சிகள் இங்கு விரிவாக நடைபெறுகின்றன. இந்த அளவுக்கு நமது யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் பலாலியில் இருக்கும் விவசாயத் துறையையும் அபிவிருத்தி செய்யவேண்டும். வடபகுதி ஒரு விவசாயப் பிரதேசம். விவசாயத் துறையை விரிவடையச் செய்வதன்மூலம் வடபகுதி விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாம்.

[11-ம் பக்கம் பார்க்க]

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தபின்பு மீண்டும் அவனுகவே பேசினன்- "அடுத்தவர் மீது கருணைவைக்கும் உங்கள் மனது நல்லதுதான். அப்படி அடுத்தவருக்கு நன்மை செய்யப் போய்த்தான் நான் இப்படியானேன்."

யார் கனகசபையா பேசுவது?

"செய்த தவறு ஒன்றுக்கு பிராயச்சித்தமாக நன்மை யென்று எண்ணி நான் செய்த ஒரு காரியம்தான் இன்று நான் இப்படி அலைவதற்குக் காரணம். என் துயரம் என்னிடம் இருக்கட்டும். வருகிறேன்"-பெருமூச்சொன்றை உதிர்த்துவிட்டுப் பிரிந்து சென்ற அவனைத்தொடர்ந்து சென்று அந்தக் கதையைக் கேட்கவேண்டும் என உள்ளத்தில் எழுந்த ஆவலை அடக்கிக் கொண்டவனாய் கால்களை தன் பாதையில் திருப்பிநடந்தான்.

நன்மை செய்து கெட்டானா? அது ஒரு கதையா? அவன் கெட்டது கருணையாலல்ல. கருணைக்கும் கனகசபைக்கும் வெகுதூரமாயிற்றே! விதிதான் அவனுக்கு வேண்டியதை விதித்திருக்கிறது! அதை அணுவணுவாக அனுபவித்துக்கொண்டிருக்கிறன் கனகசபை. தெய்வம் நின்று கொல்லுமல்லவா? அரசு கற்கோட்டைக்குள் இட்டுத் தண்டிக்கிறது. ஆண்டவனோ துன்பக் கோட்டையிலிட்டு சாதிவகையாகவே [?] தண்டித்து விடுகிறன். தான் அனுபவித்தது முத்தியசிறை; கனகசபை இன்னும் அனுபவிப்பதோ மீந்தியசிறை [?] இரண்டு சிறைகளுக்கு மிடையிலுள்ள வித்தியாசத்தை விளக்க கனகசபையின் கதையே போதும். இவ்வாறு ஓடிய சுப்பிரமணியத்தின் சிந்தனைகள். கனகசபையைப் பழி வாங்க நினைத்திருந்தது எவ்வளவு தவறானது! இனம் புரியாத நீதியொன்றே எல்லாவற்றையும் சரியாக நிறைவேற்றிவிடுகிறது. அதில் குறுக்கிட நாம் யார்?

... வீடு சமீபிக்கிறது. ஏழு வருடங்கள் ஓடி மறைந்தும் அது அக்கிராமத்திலோ அவனது வீட்டின் சூழலிலோ காலச்சக்கரம் எதையும் மாற்றி வைக்கவில்லை, அன்று பார்த்தது போலவே இன்றும் தோற்றுகிறது. வீட்டு முற்றத்தில் அதே நான்கைந்து தென்னைகளும், தூய வெண்பட்டாடை போர்த்தியதுபோல் மலர்ந்து நின்ற மல்லிகைப் பந்தரும், அதன் வாசனையும் அப்படியே இருக்கின்றன.

வீட்டினுள் நுழைகிறன். தெய்வமே நானுகத் திடீரென்று தோற்றினல் எப்படியிருக்கும்? திகைப்பு நீங்கியதும் தாயை முந்திக்கொண்டு தந்தையே அவனைச் சிறுபிள்ளைபோல் கட்டித் தழுவிக்கொள்கிறர். கண்ணீர் வெள்ளம் கலக்கிறது. வழக்கமான கதைக் கசிகள் பரிமாறிக்கொள்ளப் படுகின்றன. கவலையும் தளர்ச்சியும் தாய்,தந்தை இருவர் முகத்திலும் ஏழுடன் ஏழாக பதினைந்து இருபது வருட முதுமைக்கோலத்தை முகத்தில் பூசிவிட்டிருந்தது. மகனைக்கண்ட பூரிப்பின் புன்னகையில் முகச் சுருக்கங்கள் கூட மறைந்தன.

வீட்டினுள் ஒருவெறுமை. கலகலப்பால்வீட்டைநிரப்பி வைக்கும் குரலைக் காணவில்லை.

'கல்யாணிஎங்கே அம்மா"- தாயை வினவினன் மகன்.

தந்தையும் தாயும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தாய் மௌனமாக உள்ளேசென்று ஓர் தம்ளரில் எலுமிச்சைசரசக் கலவையைக்கொண்டுவந்து மகனிடம் நீட்டி 'தம்பி களைப்புத்தீர முதலில் இதைக் குடித்து இளைப் ஆறு. அதையெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம்' என்றள்.

இந்தப் பீடிகை அவனது ஆவலை மேலும் தூண்டிற்று.

'எங்கே கல்யாணி?'-மீண்டும் கேட்டான்.

"அண்ணனுக்குச் செய்ய வேண்டிய கடமையில் இறங்கிவிட்டாள்" - தந்தை எங்கோ பார்த்தபடி கூறினர்.

## சிறுகதை

"எனக்குச் செய்யவேண்டிய கடமையா?"

'ஆமாம். கனகசபை இப்போது கடைமுதலாளியல்ல. ஊரில் எவருமே ஏறெடுத்துப் பார்க்காத ஒரு பாவ ஜீவன். நீ சிறைசென்ற மறுவருடமே அவனது புரட்டெல்லாம் வெளிப்பட்டு வழக்காக மாட்டிக்கொண்டு எல்லாவற்றையும் இழந்தான். இனத்தவர்கள் கூட அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. இதுபோதாதென்று அவன் ஒரு தீராத நோய்ச் சரங்கமாகிவிட்டான். இத்தனையும் நிறைவேற்றி முடித்தது கல்யாணி என்ற உன் தங்கைதான். இதுபோதாதா அந்தக்கயவனுக்கு?'

சுப்பிரமணியத்தின் சிந்தை கொந்தளித்தது. 'கல்யாணியால் இதை எப்படிச் செய்ய முடிந்தது?'- தந்தையைக் கேட்டான்.

'கனகசபையின் கள்ள வியாபாரத்தைப்பற்றிய தகவல்களைச் சேகரித்து பொலிசுக்கு அனுப்பி அவனைச்சிக்க வைத்தாள். ஒட்டாண்டியான கனகசபை ஆஸ்பத்திரியைநாடியபோது அங்கே "நர்ஸ்" ஆக இருந்து அவனைத் தீராதநோயாளியாக்கினுள்.'

'நர்ஸா? அவளா? எங்கே இப்போது கல்யாணி?'

'அவள் போய்விட்டாள்"- இடிபோல் உதிர்ந்த வார்த்தையைத்தொடர்ந்து கட்டி வைத்திருந்த கண்ணீர் வெள்ளம் தந்தையின் கன்னவிழிந்து பெருகிற்று. வெடித்தலைந்த விம்மல்களிடையே கூறிமுடித்தார் - 'நான்கு வருடங்களின்முன் இதற்கென்றே தாதிசேவையில் சேர்ந்து படித்து நர்ஸாகி, கனகசபை ஆஸ்பத்திரிக்கு வந்தபோது அவனுக்கு கொடுக்கவேண்டிய மருந்துடன் விஷத்தையும் கலந்துகொடுத்து அதனையே தானும் குடித்து மாண்டாள். ஆனல் கனகசபையை சாகாதபிணமாக, தீராத நோயாளியாக்கி அவனை உயிர்பிழைக்க கருணைகாட்டிய விஷம் கல்யாணியின் உயிரை முற்ருகப் பறித்துவிட்டது.'

சுப்பிரமணியம் மரமாகி நின்றன்.

'கல்யாணி நர்சுக்கு எப்படிப் படித்தாள்? பணம்-?' —அவன் வாய் தானுக வினவிற்று.

"விளையாடுகிருயா தம்பி? சிறை சென்ற மறுவருடமே நர்சுக்குப்படி என்று மாதம் இருநூறு ரூபாய் வீதமாக இரண்டு வருடங்களாக அனுப்பிவைத்துவிட்டு ஏதும் தெரியாததுபோலக் கேட்கிறயே?"- தாய் கூறினள். "பணமா? நான் அனுப்பினேனு? சிறையிலிருந்தவனுக்கு ஏது பணம்?"- சுப்பிரமணியம் வாயடைத்து நின்றன். "என்ன சொல்கிறய்?"- பெற்றோர்கள் ஏதும் புரியாமல் விழித்தார்கள்.

சுப்பிரமணியத்திற்கு எல்லாம் ஒரு கணத்தில் புரிந்தது. "கல்யாணி......நீ அவசரப்பட்டுவிட்டாயே! அண்ணனின் பாசம்தான் உன்னை அவ்வளவு தூரம் ஆட்டிப் படைத்திருக்கிறது. என்னையே ஒரு நிமிடம் முன்பு வரை கொலை வெறியனுக ஆக்கிவைத்தது எனில் உன்னையும் அந்தப் பாசம் அப்படியாக்கிவிட்டதா? ஆனல் உனக்கு உண்மை புரியவில்லை. நான் செய்த தவறினல் எங்கள் வாழ்வு சீரழிவதைக் கண்ட கனகசபை, அதற்குப் பிராயச்சித்தமாக உதவி செய்யத் துணிந்தான், அதற்காகவே நான்கு வருடங்கள் முன்பு என் பெயரில் உங்களுக்குப் பணம் அனுப்பிவந்திருக்கிறன். அவன் அனுப்பிய பணத்திலேயே படித்து நர்ஸாகி, அவனையே கடுவதுக்கத் துணிந்துவிட்டாய்! அதை நீ செய்யவில்லை. ஆமாம்...... அவன் பாவத்தால் சேகரித்த பணமே அவன் வாழ்வுக்கு விஷமாகியது! ஆனல் பிழைவிடுவது மனித இயல்பு; திருந்துவது தெய்வ இயல்பு என்பார்கள்...... அவன் தெய்வம் விதி வேண்டியதைக் கொடுத்துவிட்டது"- சுப்பிரமணியத்தின் உணர்ச்சி நமச்சிவாயத்திற்கும் புரிந்தது. அவரது கண்கள் காந்தியின் படத்தில் நிலைத்து நின்றன.

'பிழைவிடுவது மனித இயல்பு; திருந்துவது தெய்வீகம்!

